
# வில்லிசையின் மணி மகுடம்



அமரர்

வில்லிசைப்புலவர், கலாவினோதன்

**நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி)**

அவர்களின் சிவப்பதப்பேறு குறித்த

ஞாபகார்த்த வெளியீடு

**20.02.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதனையின்
மைந்தனாய்
மலர்வு

30 . 03 . 1936

சாதனைக்
கலைஞனாய்
உதிர்வு

04 . 02 . 2015

அமரர்

# வில்லிசைப்புலவர் கலாவினோதன்
# நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி)


அவர்களின் திதி வெண்பா

ஆண்டு ஜயமதில் அண்டிவரு தைத்திங்கள்
பூண்ட அபரப் பிரதமையாம் - நீண்டபுகழ்
வில்லிசை வேந்தனெம் சின்னமணி மேலுலகின்
நல்லிசைக்காய் ஏகிய நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் கலைஞன் சின்னமணி அவர்கள் பாரியாருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனை உரை



ஈழத்துக் கலையுலகில் தனக்கென முத்திரை பதித்த வில்லிசைக் கலைஞர் கலாவினோதன் உயர் திரு கணபதிப்பிள்ளை சின்னமணி அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த கவலை அடைகின்றேன். சைவ சமயத்தவர்களின் புராண இதிகாசச் செய்திகளை படித்தவர்கள் முதல் பாமர மக்கள் வரை வில்லிசையால் அறிய வைத்த மாபெரும் கலைப் பொக்கிசத்தை யாம் இழந்து விட்டோம்

இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று. இரண்டு ஆண்டுகளிற்கு முன் அன்னை சிவத்திமிழ்ச் செல்வி பிறந்த நாள் அறக்கொடை விழாவில் கலைஞர் சின்னமணி அவர்களிற்கு எங்கள் தேவஸ்தானம் சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவித்தது. இவ்விழாவில் அன்னார் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

நோய்வாய்ப்பட்ட நிலையிலும் எமது கௌரவத்தை மதித்து அவைக்கு வந்தார்கள். அன்று அவர் ஆற்றிய உரை பலரை அழ வைத்தது. தினமும் ஆயிரம் ஆயிரம் இரசிகர்கள் முன் வாழ்ந்த நான் தற்போது முதுமையோடு வீட்டிற்குள் அடங்கி விட்டேன். கலைஞர்கள் மக்களோடு வாழ்பவர்கள். கலைஞன் தனிமையில் தத்தளிக்க முடியாது. இன்று மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. இனிமேல் மண்ணில் வாழ்வதென்பது கடினம். விண்ணுலகம் வாவா என்று அழைத்தவண்ணம் இருக்கின்றது என்றார்.

அவரது உரை கேட்ட சபை கண்கலங்கியது. ஒரு கலைஞனின் ஆற்றலை அனுபவித்த சமூகம் அக்கலைஞனின் முதுமைக் காலத்தில் அவர்களை நாடித் தேடிச் சென்று அவர்களின் உள்ளத்தை ஆறுதல் செய்யவேண்டியது மனிதாபிமானக் கடமையாகும். சின்னமணி என்ற நாமம் இலங்கையில் மட்டுமல்ல புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் குடிகொண்ட இடங்களிலும் உச்சரிக்கப்பட்ட வண்ணம் உள்ளது. மிகப்பெரிய கலைஞனாக கலையுலகம் மதித்த கலைஞன் இவர்.இராமநாதன் கல்லூரி நடன வித்தகராக விளங்கிய கீதாஞ்சலி நல்லையா அவர்களினால் இக்கலைஞன் சிறு பராயத்திலேயே ஆற்றுப்படுத்தப்பட்டார்.

இயல், இசை நாடகம் அனைத்திலும் தேர்ச்சிபெற்ற கலைஞனாக விளங்கினார். ஈழத்து இசைநாடக வரலாற்றிலும் கலைஞன் சின்னமணி அவர்களின் பங்களிப்பு மறக்க முடியாதது. இவரிடம் இருந்த மனன சக்தியைக் கண்டு பலர் வியந்திருக்கின்றார்கள். இசை நாடகப் பாடல்கள் பெரும்பாலும் இவருக்கு மனனம். அன்றைய இசை நாடகங்கள் சுமார் 4, 5 மணித்தியாலங்கள் தொடர்வது வழக்கம் அக்காலத்தில் ஒவ்வொரு பாத்திரங்களின் பாடல்களும் நீண்டதாக அமைந்திருந்தன. திரு சின்னமணி அவர்கள் முதுமையிலும் அப்பாடல்கள் அனைத்தையும் மனனமாக வைத்திருந்தமையைக் கண்டு பலர் வியந்துள்ளனர்.

1960களின் பிற்பகுதியில் யாழ்.இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியர்களாக விளங்கிய திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களும் ஆர்மோனிய வித்துவான் சோமசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் சின்மணி என்றை இசைநாடகக் கலைஞனைத் தங்களோடு இணைத்து வில்லிசையை ஆரம்பித்தனர். இக்குழுவில் அங்கம் வகித்தவர்கள் பெரும்பாலானவர்கள் ஆசிரியர்கள். மிகுந்த செல்வாக்குப் பெற்ற இக்குழுவினர் இலங்கையின் பல பாகங்களிலும் தம் ஆற்றலை வெளிப்படுத்தினர்.

திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்கள் ஆசிரிய இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் கலாவினோதன் சின்னமணி அவர்கள் இக்கலையைக் கைவிடாது இக்கலையைத் தமது ஆளுமையால் தொடர்ந்தார்கள். கலைவாணர் வில்லிசைக் குழு என்ற பெயரில் இவர்கள் வலம் வந்தனர். இவர்களது குழுவில் எஸ்.ரி.அரசு அவர்களும் அங்கம் வகித்தார்கள். சிறந்த நாடகக் கலைஞரான அரசு அவர்கள் சின்னமணி அவர்களின் வில்லிசையில் முதன்மை பெற்றார். இலங்கையில் மட்டுமன்றி எழுபதுகளில் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளிலும் கலைவாணர் வில்லிசைக் குழு பல நிகழ்ச்சிகளை நடத்தி பெருமை பெற்றது.

இலங்கையில் வில்லிசைக் கலை இந்தியக் கலைஞர்களால் அறிமுகம் செய்யப்பட்ட போதும் இக்கலையை ஈழத்தில் உயிராக வளர்த்தெடுத்த பெருமை திரு சின்னமணி அவர்களைச் சாரும். தீர்க்கசுமங்கலி, வள்ளிதிருமணம், காரைக்கால் அம்மையார் சரிதம், திருநீலகண்டர் சரிதம், கண்ணகி சரிதம், இராமாயணம், பட்டினத்தார் வரலாறு, அருணகிரிநாதர் வரலாறு என்னும் பல தலைப்புக்களில் தெய்வீகக் கதைகளை நகைச்சுவையோடு வழங்குவதில் இக்கலைஞருக்கு நிகராக இன்று எவருமே இல்லை.

சபையில் திருநீற்றுக் குறியோடு, மங்கல அணிகலன்களோடு சிரிக்க வைத்த கலைஞன் நினைவுகள் மறக்க முடியாதவை. நவரசங்களையும் வில்லிசையிலே வெளிப்படுத்திய இக்கலைஞனின் கலைநுட்பம் எளிதில் பிறரால் கைக் கொள்ள முடியவில்லை. எத்தனை மணிநேரமும் மக்களைச் சலிக்க வைக்காமல் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த இவ்வித்தகனை இனிமேல் எங்கு சந்திப்போம்.

எனது மழலைப் பருவம் முதல் இக்கலைஞனின் வில்லிசையைக் கேட்டு இரசித்த நாட்கள் மறக்க முடியவில்லை. ஆன்மீக சொற்பொழிவுகளிற்காக பல கோயில்களுக்குச் சென்ற வேளை அவரைச் சந்தித்துஅவரது அன்பையும் ஆசியையும் பெறும் வாய்ப்புக் கிட்டியது. எனது தந்தையாரின் இனிய நண்பராக இவர் விளங்கினார். நீர்வேலிக் கந்தசாமி கோவில், கோப்பாய் இலுப்பையடிப் பிள்ளையார் கோவில், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் மூன்றிலும் எங்கள் உபயத்திற்கு இவர்களது வில்லிசை நிகழ்ச்சி பல வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெற்றது. அந்த நாட்கள் பசுமையாக உள்ளது.

கம்பன் கழக விழாவில் இயமனாக வந்து ஆடிப்பாடிய காட்சி இன்னும் அகத்தில் நிறைந்திருக்கின்றது. இந்த மகத்தான கலைஞன் இன்று எம்மிடையே இல்லை. வில்லிசை உள்ள வரை இவ்வித்தகன் வாழ்வான். இக்கலைஞனின் ஆம்மா சாந்தி பெற துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,**


**தலைவர்,**

**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் , தெல்லிப்பளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநிலம் பயனுறு ஒலித்த சின்னமணி



சின்னமணிக்கு நேரில் அஞ்சலி செலுத்த முடியாமற் போயிற்று. முடியாத காலம். உடல் நிலை இடம் தரவில்லை. உள்ளம் ஏங்கிற்று. உயிர் உள்ளவரை உறுத்தல் இருக்கப்போகிறது. புத்திரிகையில் செய்தியைப் படித்த போது உள்ளம் ஒரு கணம் உறைந்தது. நம்ப முடியவில்லை. அவர் தவறி விழுந்ததும் தலையில் அடிபட்டதும் வைத்தியசாலையில் இருந்ததும் செய்தியில் இருந்தது. அதை நம்பித்தானே ஆக வேண்டும். சாவுக்கும் சாட்டொன்று தேவைப்படுகின்றதே.

கணபதிப்பிள்ளையை எனக்குத் தெரியாது. சின்னமணியைத் தான் தெரியும். அவர் சிந்தையில், செயலில் "சின்ன" மணியல்ல. கண்டா மணி. நல்ல மனிதர். நயம் படப் பேசத் தெரிந்தவர். பழகத் தெரிந்தவர். சிரிக்கத் தெரிந்தவர். சிரிக்க வைக்கத் தெரிந்தவர். செயலாற்றத் தெரிந்தவர். சேவையும் அறிந்தவர். சேவிக்கவும் தெரிந்தவர். இவற்றையும் இவை போன்ற இன்னும் பலவற்றையும் தன் நினைவாக அவர் இங்கே விட்டுச் சென்றுள்ளார். அவர் விட்டுச் சென்ற எச்சங்கள் இவை. அவர் தக்கவரா இல்லையா எனப் பர்ப்பது அவரவர் பொழுது போக்கு.

சின்னமணியைத் தொலைவில் இருந்து நான் பார்த்து நயந்த காலங்களும் வேளைகளும் தான் அதிகம். அருகிருந்து பார்க்கக் கிடைத்த கணங்கள் மிகக் குறைவு. இருப்பினும் என்னைக் கவர்ந்தவர்களுள் அவரும் முக்கிமான ஒருவர். அவரது ஆளுமைப் பெற்றி அத்தகையது. சின்னமணி சிறந்ததொரு உரையாடல் வல்லுனர். அது அவரது இயல்பில் இருந்தது. அவர் தனக்கென வரித்துக் கொண்ட வில்லிசைக் கலையால் அவ்வியல்பு புடம் போடப்பட்டது, மெருகேற்றப்பட்டது. இவர் இருக்கும் இடம் கலகலப்பாக மகிழ்ச்சி நிறைந்ததாக எப்பவும் இருக்கும். இதனால் அவர் இருக்கும் சூழல் மாசுபடுவதில்லை. இவரது இயல்பாக அமைந்து விட்ட இந்தப் பண்பு தான் இவரைச் சிறந்த கலைஞனாகச் சமைத்தெடுத்தது என்பது எனது திடமான எண்ணமாக உள்ளது.

இவர் இலங்கைத் தமிழர் மத்தியில் மட்டுமல்லாது தமிழர் வாழும் பரந்து பட்ட உலகிலும் நன்கு அறியப்பட்டவராக இருந்தமைக்கு இவரிடத்திருந்த பல்துறை சார்ந்த அறிவும் பயில்வுமே காரணமாக இருந்தது. தமிழறிவு, சமய அறிவு, இதிகாச புராண அறிவு, இசையறிவு, நடன அறிவு, நடிப்பில் பயில்வு, ஆற்றுகைத்திறன், கதைசொல்லும் ஆற்றல், சமூக உளவியல் சார்ந்த அறிவு, இவரிடம் இயல்பாகவே இருந்த நகைச்சுவை உணர்வு, கூரறிவாற்றல் என யாவும் சேர்ந்தே இவரைச் சிறந்ததொரு வில்லிசைக் கலைஞனாகவும் சமூக மற்றும் வரலாற்று நாடகக் கலைஞனாகவும், மிகப் புகழ்பெற்ற இசைநாடகக் கலைஞனாகவும் செதுக்கி எடுத்தன. இத்தனையோடும் கலையைக் காதலிக்கவும் கலைஞர்களைக் காதலிக்கவும் மக்களை நேசிக்கவும் அறிந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இவரோடு இணைந்து செயலாற்றவும் இவரது ஆற்றுகைகளை நயக்கவும் பலர் கூடினர். இவர் ஒரே சமயத்தில் மக்கள் நயக்கும் கலைஞனாகவும் கலைத்துவம் மிக்க படைப்புக்களைப் படைக்கும் உயர் கலைஞனாகவும் இருந்தார். இந்தவாறு இருப்பது என்பது ஒரு சிலரால் மட்டுமே முடிந்த ஒன்று.

மிகச் சிறந்ததொரு வரலாற்று நாடக நடிகனாகச் சின்னமணியை மேடையில் காணும் வாய்ப்பு 50,60 வருடங்களிற்கு முன்னர் எனக்குக் கிட்டியது. "வண்ணைக் கலைவாணர் நாடக மன்றம்" தயாரித்த "திப்பு சுல்த்தான்" என்ற வரலாற்று நாடகத்தில் சின்னமணி, ரி.எஸ்.லோகநாதன், பிரான்சிஸ் ஜெனம் ஆகியோர் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்திருந்தனர். இவர்களது ஆற்றுகைத் திறன் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. அன்று தான் சின்னமணியை ஒரு நடிகனாக நான் கண்டேன். அவரது நடிப்புச் சிறப்பைக் கண்டு வியந்தேன். இந்த நாடகத்தை எஸ்.ரி.அரசு நெறிப்படுத்தியிருந்தார். பிற்காலத்தில் இவரது நடிப்பாற்றலை இவரது வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளிலும் இசை நாடகங்களிலும் கண்டு நயந்துள்ளேன். இசைப் பயில்வும் நடனப் பயில்வும் பேச்சுப் பயில்வும் கற்பனைத்திறனும் இணைந்து இவரை மிகச் சிறந்ததொரு நடிகனாகவும் கலைஞனாகவும் உயர்த்தியிருந்தன. இசை நாடகத்தில் "இயமன்" மார்க்கண்டுவிற்குப் பின்னர் சின்னமணி "இயமன்" சின்னமணியானார். இயமனுக்கு மரணம் வரமோ? இல்லை .. வராது. வில்லிசைச் சின்னமணி கையாண்ட வில்லின்நாணில் கோர்ததிருந்த சதங்கைகளின் இன்னொலியும் சின்னமணியின் மணிக்குரலும் மகாகவியின் வழிநின்று

"யாதுமாகி நின்றாய் - காளி எங்கும் நீ நிறைந்தார்:
தீது நன்மையெல்லாம் - நின்தன் செயல்களன்றி இல்லை
போதும் இங்கு மாந்தர் - வாழும் பொய்மை வாழ்க்கை எல்லாம்
ஆதி சக்தி தாயே! — என் மீதருள் புரிந்து காப்பாய்
எந்த நாளும் நின்மேல் - தாயே! இசைகள் பாடி வாழ்வேன்
..........................................................
என்று காளியைப் போற்றிப் பாடப் போயின போலும்.

**குழந்தை ம.சண்முகலிங்கம்**
**இயக்குனர்,**
**நாடக அரங்கக் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் உலகக் கலைஞன்



உலகக் கலைஞன் ஒருவன் மறைந்துவிட்டான்.
ஈழத்தமிழினத்தின் இன்னல்தொடர்கிறதோ?
முத்தமிழ்த் துறையில் முறைபோகிய ஓர் உத்தமக் கலைஞனை,
இழந்து இன்று இன்னலுறுகிறது ஈழத்தமிழினம்.
வில்லுக்கு விசயன்! இது பழைய செய்தி.
வில்லுக்குச் சின்னமணி! இது ஈழத்தமிழர் இயம்பும் புதிய செய்தி.
விசயனது வில் உடல்களைத் துளைத்தது!
சின்னமணியின் வில் அறிவைத் துளைத்தது!
கண்டோர் அஞ்சிய வில் அது!
காணத்தவம் இருந்த வில் இது!
மற்றோரை வீழ்த்தி வென்றது விசயன் வில்!
உயர்த்தி வென்றது சின்னமணியின் வில்!
வில்லிசைக்களத்தில்,
'கலைவாணர்" போன்ற பெருங்கலைஞர்களையும்,
தன் தனிப்பாணியால் வென்று புகழ் கொண்ட வீரர் இவர்.
கலை, கருத்து, நகை எனும் மூன்றும் கலந்து,
சின்னமணி தந்த முக்கூட்டு மாத்திரையை,
யாழ் முழுதும் விரும்பி உண்டது!
அவர் பக்கமாய்த் திரும்பி நின்றது!
நரை விழுந்து நடக்க முடியாத கிழவியும்,
இவர் முகம் காணக் காதலோடு காத்திருந்த காலமது.
சின்னமணியின் நேரம் கேட்ட பின்பே,
ஆலயங்களில் வீதி வலம் வர சிவனுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டது.
பெயரில் சின்னமணி! புகழில் பெரியமணி!
தன் வியத்தகு கலை ஆற்றலால்,
கம்பன் கழகத்தை வளர்க்க உதவிய பெரியோன்.
கண்ணுக்குள் நிற்கும் கறுப்புக்கட்டழகன்.
எங்கள் இசைநாடக மேடைகளில் இவர் ஏற,
வெறுக்கும் யமனை சபை விரும்பத் தொடங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லிசையைப் பொறுத்தவரை,

சின்னமணிக்கு நிகரான ஒரு கலைஞன்,

உலகில் இல்லை.

இவரால் தலை நிமிர்ந்த யாழ் மண்,

இன்று இவரையே உள் வாங்கித் தன் தாகம் தீர்த்தது.

இயற்கை உணர்ந்து இழப்பைச் சகிப்பதைத் தவிர வேறு வழி என்ன?

இழப்பை ஏற்று நம் ஆத்மா சாந்தியுறுவதாக!

சின்னமணியானாலும் இந்த மணியின் நாதம்,

இன்னும் பலகாலம் தமிழர் இதயங்களில் நிலைத்து நிற்கும்.

**'இன்பமே எந்நாளும் துன்பமில்லை"**

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**
**கம்பன் கழகம்,**
**இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடு தந்த பல்கலை வேந்தன்



எங்கள் காலத்தின் உயர் கலை ஆளுமையாய் உலகளந்த வில்லிசைக் கலைஞர் நா.கணபதிப்பிள்ளை சின்னமணி அவர்களின் உயிர்க் குரல் ஓய்ந்தது தாங்க முடியாதது.

சின்ன வயதில் அவர் வில்லிசை தந்த அருட்டுணர்வில் எங்கள் தண்ணீர்த்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் சச்சியண்ணையும் நானும் பழக்கிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை வாழ்த்திய நாள் முதலாய் பின்னாளில் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் ஆதரித்து வளர்த்த உறவின் கணங்கள் யாவும் நெஞ்சிலே வியாபகமாகின்றன. அவர் மேன்மைகளைப் பதிவாக்கும் இந்த சிறிய குறிப்பின் உயிர்ப்பாகின்றன.

அனைத்துக் கலைகளினதும் ஊற்றுக் கண்களாக கிராமியக் கலைகள் போற்றப்படுகின்றன. ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் அரண்களாகவும் அவை பெருமை பெறுகின்றன. இந்த வகையில் எங்கள் கிராமியக் கலை வரலாற்றில் வில்லிசை கொண்ட இடம் முக்கியமானது. வீரயுக காலம் முதலாய் பண்டபாட்டு விழுமியங்களையும் சொல்லாடல்களையும் சமூகமயப்படுத்தும் சக்திமிக்க ஊடகம் வில்லிசை. இத்தகைய கலைவடிவத்தை வசமாக்கி எங்கள் கலை வரலாற்றுக்கும் வாழ்வுக்கும் வளம் சேர்த்தவர் நா.கணபதிப்பிள்ளை சின்னமணி அவர்கள்.

வில்லிசைக் கலையின் உச்சங்களை அவர் தொடவும் பெருமை பெறவும் அவரது முழுதளாவிய (Holistic) கலை ஆளுமையே அடிப்படையாகும்.

இயல், இசை, நாடகம்...
முத்தமிழின் அத்தனை வல்லமைகளையும் வேண்டி நிற்பது வில்லிசைக் கலை

இவை யாவும் சின்னமணி அவர்களுக்கு முதுசொமாகவும் தேடிய தேட்டமாகவும் அமையப்பெற்றன.

பிறந்த ஊரான மாதனைக் கண்ணகையம்மன் ஆலயச் சூழமைவின் கூத்துக்கலை அனுபவ உயிர்ப்பு...

பெற்றோர் வழிவந்த தமிழறிவு
ஈழத்துப் பரதக்கலை மூவருள் ஒருவரான மாமனார் கீதாஞ்சலி நல்லையா அவர்களிடம் பெற்ற இசை, நடனப் பயில்வு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் ஆசிரியப் பணிக்காகக் கொழும்பு சென்ற காலை வில்லிசைக் கலைக்குப் புதுவாழ்வு தந்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களுடன் இசைந்திடக் கிடைத்த வாய்ப்பு...

வில்லிசைக் கலையின்பால் சின்னமணி அவர்களை ஈர்த்து, நிலைபெறச் செய்த வரங்கள் என்றால் மிகையில்லை

புகழ்பூத்த திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களின் வில்லிசைக் குழுவில் பக்கப்பாட்டுக்காரனாகத் தொடங்கிய பயணம், அவரது ஆசியுடனேயே தனித்துவமான வில்லிசைக் கலைஞனாகப் பரிணமித்தது

பண்பாட்டின் கதைகளைத் தேர்ந்து ஒழுங்கமைத்தரும் தெளிந்த நீரோடையான அவரது சொல்லாடல்கள் ...

சொல்லும் பாத்திரமாகவே மாறிவிடும் நாடகக் கலைஞானம்...
சுருதி சுத்தமாகவும் ரஞ்சகமாகவும் பாடும் இசை ஞானம்
ரசிகர்களை வசமாக்கும் நயமான நகைச்சுவை

சின்னமணி அவர்கள் தனித்துவத்தின் அணிகலன்கள்.
இவை எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை

தனக்குப் பின்னால் இக்கலையின் தொடர்ச்சி பற்றிய தரிசனத்துடன் தன் வாரிசுக் கலைஞரை வாழும் காலத்திலேயே அறிமுகம் செய்தும் பாடசாலை மாணவரிடை இக்கலைப்பயில்வை ஊக்குவித்தும் அவராற்றிய பணி காலத்தினால் செய்த பெரும் பணியாகும்.

எனினும் பண்டங்களாகும் இன்றைய கலைச்சந்தையில் எங்கள் கலைவடிவங்களின் இருப்புப் பற்றிய அவரது பெருங் கவலை இறுதிக் காலத்து அவரது நோய் தந்த வலியை விட அதிகமானது. அண்மையில் மருத்துவ மனையொன்றில் அவரைச் சந்திக்கக் கிடைத்த பொழுதில் "இது பற்றி நீள உரையாட வேண்டும் சண்" என ஆரத்தழுவி விடை பெற்றுக் கொண்டோம்.


அந்தப் பொழுது வராமலே போனது...
எங்கள் பண்பாடு கண்ட பல்கலை வேந்தனே...

சாந்தி பெறுக ! சாந்தி தருக !!

**சிரேஸ்ட பேராசிரியர், கலாநிதி என்.சண்முகலிங்கன்,**
**முன்னாள் துணைவேந்தர், தலைவர் , சமூகவியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லிசை வேந்தனை வாழ்த்தி விடைபெறுகிறோம்!



வட இலங்கையில் பருத்தித்துறைப் பகுதியில் கலைமலிந்த ஊராகத் திகழ்வது மாதனை. மாதனை என்றால் அங்கு சிறப்பாக அமைந்திருப்பது கண்ணகை அம்மன் கோயில். அதை விட அங்குள்ளவர்கள் இசை நாடகக் கலைஞர்கள். காத்தவராயன் கூத்துக்கு மாதனை பெயர் பெற்றது. அங்குதான் ஈழத்து வில்லிசை வேந்தன் சின்னமணி கணபதிப்பிள்ளை பிறந்தவர். பிற்காலத்தில் அவர் அச்சுவேலியிலேயே வாழ்ந்தார். சின்னமணியை உலகம் முழுவதும் ஒரு வில்லிசைக் கலைஞனாக அறிந்து பாராட்டி வருகிறது. அவர் ஒரு மிகச் சிறந்த இசைநாடகக் கலைஞனாகவும் திகழ்ந்தவர். சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் இயமன் வேடத்தில் வந்தால் முன்வரிசையில் அமர்ந்திருக்கும் குழந்தைகள் பதறி அலறிப் பின்னாலே ஓடுவதுண்டு. அவ்வளவு வேடப் பொருத்தம். இசையும் நடிப்பும் நன்றாக இழைந்து இரசிகர்களுக்கு நல்ல விருந்தளிக்கும் கலைஞன். சிலவேளைகளிலே தன்னுடைய மதிநுட்பத்தினைப் பயன்படுத்தும் கலைஞனாகவும் அவர் திகழ்ந்ததை நாம் நேரடியாகக் கண்டுள்ளோம். ஒரு வேளை சத்தியவான் சாவித்திரி நாடகம் நிறைவு நிகழ்ச்சியாக மேடை ஏறியது. நேரமோ அகாலம். நாடகம் விரைவாக முடிந்தால் நல்லது எனப் பலரும் எண்ணிய நேரம். அந்த வேளை மேடையில் இயமனும் சாவித்திரியும் தோன்றினார்கள். இயமன் வரம் கொடுக்கும் வேளை. சின்னமணி நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டு "சாவித்திரி! நேரம் போய்விட்டது. நான் விரைவாகச் செல்லவேண்டும். உன்னுடைய வரங்களை ஒன்றாகக் கூறு." என்றார். நாடகம் விரைவிலே முடிந்தது.


எப்பொழுதுமே மகிழ்வுடனும் கலைத் தோற்றத்துடனும் சின்னமணி காணப்படுவார். அவருடன் பேசுவதென்றால் எல்லோருக்குமே விருப்பம் ஏற்படும். யாழ்ப்பாணத் தமிழை கலை நயத்துடன் பேசுபவர் அவர். அவருடைய இரசிகன் திரு. ச. லலீசன்தான் அம்மாபெருங் கலைஞனின் கலைமூச்சு அடங்கி விட்டது என மின்னஞ்சலூடாக அறிவித்தார். வேந்தனாட்சி நம் நாட்டிலிருந்து நீங்கிய பெப்ருவரி 4ஆம் திகதி நம்முடைய கலைவேந்தனும் நம்மை விட்டு நீங்கி அமரத்துவம் அடைந்துவிட்டார். அன்னாருடைய ஆத்மா இறைவனின் தாமரைத் தாளிலே அமைதிபெற வேண்டுகிறேன்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்.**
**கனடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லிசையின் முகவரி



நாட்டார் கலைகளையும் மக்கள் நயக்கத்தக்க கலைகளாக முன்னிலைப்படுத்த முடியும் என்று சாதித்துக்காட்டியவருள் சின்னமணி ஐயாவுக்குத் தனியிடம் உண்டு.ஈழத்து வில்லிசைக் கலையின் முகவரியாக அவரே திகழ்ந்தார்.

தென்மராட்சியில் சரசாலையைச் சொந்த இடமாகக் கொண்ட நான் அச்சுவேலியைச் சேர்ந்த என்னுடைய வாழ்க்கைத் துணைவியை முதன்முதலாகக் கலாசாலையில் சந்தித்த போது "சின்னமணியைத் தெரியுமா?" என்று கேட்டமை எனக்கு நினைவுக்கு வருகின்றது. இதுதான் நாங்கள் அன்று பரிமாறிக் கொண்ட முதல் வார்த்தை அவ்வாறு அச்சுவேலியின் முகவரியாகவும் அவரே திகழ்ந்தார்.

அருணகிரிநாதரைப், பட்டினத்தாரைத், திருநீலகண்டரை இன்னும் பல சமய இலக்கியக் கதாபாத்திரங்களை சின்னமணி ஐயா வாயிலாகவே நான் முதன்முதலாக அறிந்தேன். சிறுவயதில் திருவிழாப் பார்க்கப் போய் மேளக் கச்சேரி, வில்லுப்பாட்டு, இசைக்குழு என்று ஒரு காலத்தில் பேணப்பட்ட நிகழ்வொழுங்கு வாய்ப்பாட்டிற்குள் இரண்டவதுடன் நித்திரையாகிவிடும் வர்க்கத்தைச் சார்ந்தவன் நான். நான் மட்டுமல்ல எங்களூரில் கற்றறிந்தவர்கள் எனப் போற்றப்பட்டவர்கள்கூட சின்னமணி வில்லிசைக்காகக் காத்திருந்து அந்நிகழ்வுடன் விடைபெறுவதைக் கௌரவமாகக் கொண்டிருந்தனர். அவ்வாறு படித்தவர் முதல் பாமரர் வரை சின்னமணியின் வில்லிசைக்கு இரசிகர்கள் இருந்தனர்.

தமிழர்கள் மத்தியில் வில்லிசைக் கலையைப் பிரபலமாக்கியவர்களுள் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனுக்குத் தனியிடம் இருக்கின்றது. சின்னமணி ஐயா இரத்மலானையில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் கொழும்பில் தங்கியிருந்த கலைவாணருடன் தொடர்புகொண்டு வில்லிசைக் கலையின் நுணுக்கங்களைத் தெரிந்துகொண்டார். அத்துடன் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வில்லிசைக் கலையை முன்னெடுத்தவரான திருப்பூங்குடி (புங்குடுதீவு) ஆறுமுகம் அவர்களுக்கு உடுக்கிசைக் கலைஞனாகவும் பக்கப்பாட்டுக் கலைஞனாகவும் செயற்பட்டிருந்தார்.

கீதாஞ்சலி நல்லையாவிடம் பயின்ற நடனம் சார்ந்த அறிவு, ஆசிரியர் என்ற தளத்தில் பெற்றிருக்கக்கூடிய விடய ஞானம், கலைவாணரிடமும், திருப்பூங்குடி ஆறுமுகத்திடமும் பெற்ற பட்டறிவு என அனைத்தும் சேர்ந்த கலவையே 'சின்னமணி என்றால் மிகைப்படாது. ஈழத்தில் ஒரு கலைஞன் அடையக்கூடிய புகழின் சிகரத்தைச் சின்னமணிஐயா தொட்டிருந்தார். ஈழத்தமிழ் மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சின்னமணி ஐயாவின் கலை ஆற்றுகைக் களம் விரியுமளவிற்கு அவரது புகழ் பரந்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னமணி ஐயாவுக்கும் எனக்குமிடையிலான நெருக்கம், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தினரின் செம்புலம் மலர் உருவாக்கத்துடனேயே ஏற்பட்டது. அம்மலரில் வில்லிசைக் கலை பற்றி அவர் ஓர் ஆக்கத்தை வரைந்திருந்தார். அன்று ஏற்பட்ட நட்பு படிப்படியாக வளர்ச்சி கண்டது.

தனது சீடர்களான மதி, விஜயநாதன் ஆகியோரை அங்கீகரித்து 12.07.2013இல் அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார் கோவிலில் வில்லிசை அரங்கேற்றம் இடம்பெற்றபோது, என்மீது கொண்டிருந்த அபிமானத்தால் என்னையே தலைமை தாங்கவேண்டும் என அன்புரிமையுடன் வேண்டிக் கொண்டார். இந்த அடித்தளமே அவரது இறுதி நிகழ்வுக்கும் தலைமைதாங்க வேண்டிய விதிப்பனவை எனக்கு வழங்கியது.

கடந்த ஆண்டில் அச்சுவேலிப் பிரதேசத்தை மையப்படுத்தி கலை பண்பாட்டு விழா ஒன்றை முன்னெடுத்திருந்தோம். அதற்குரிய இயக்கசக்திகளுள் ஒன்றாக நானும் செயற்பட்டிருந்தேன். அந்த விழாவிற்கான அழைப்பிதழ்கூட சின்னமணி ஐயாவின் நாடகத் தோற்றத்தாலேயே பொலிவு பெற்றிருந்தது. உடல் தளர்ந்து இயலாத நிலையிலும் அன்றைய விழாவில் நேரில் கலந்து கொண்டு அச்சூர்குரிசில் என்ற விருதைப் பெற்று சின்னமணி ஐயா எம்மைப் பெருமைப்படுத்தியிருந்தார்.


சின்னமணியின் வழியில் ஈழத்தில் வில்லிசையை முன்னெடுத்த பலரை அடையாளப்படுத்தலாம். வானம்பாடி யோகராஜா (அமரர்), ஸ்ரீதேவி எஸ்.எஸ்.சர்மா, சிறுப்பிட்டி சத்தியதாஸ், நாச்சிமார் கோவிலடி ஸ்ரீதர், மீசாலை சித்திரவேலாயுதர் மகேஸ்வரன், சின்னமணி சிஷ்யர் மதி எனப் பலர் இம்மண்ணில் வில்லிசைக் கலையை முன்னெடுக்கும் நிலையிருந்தாலும் வில்லிசை என்றால் சின்னமணி என்பதே உலகோரின் அங்கீகாரம். தமிழகத்தின் சுப்பு ஆறுமுகத்தைக் காட்டிலும் இத்துறையில் புகழ் பெற்று அங்கீகாரம் பெற்றவர் சின்னமணி என்பது வெறும் புகழ் மொழியல்ல.

கலையிற் சிறந்தது தமிழகமாயினும், வில்லிசையில் அது ஈழத்திற்குத் தலைவணங்கித்தான் ஆக வேண்டும். அத்தகு பெருமைகளுக்குக் காரணராகிய சின்னமணி எங்கள் கலைகளின் வரலாற்றில் என்றும் வாழ்வார்.

**செந்தமிழ்ச்சொல்லருவி**
**ச.லலீசன்**
**பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கின் கலை அடையாளம்



சின்னமணி என உலகோரால் அறியப்பட்ட நாகலிங்கம் கணபதிப்பிள்ளை 30.03.1936இல் வடமராட்சி மாதனையில் பிறந்தவர். 1960 இல் அச்சுவேலியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் அன்னமுத்துவை மணம் முடித்ததன் வாயிலாக எம்பிரதேசத்தைத் தனது வாழ்பதியாக்கிக் கொண்டார்.

வில்லிசை என்றால் சின்னமணி என்னும் அளவிற்கு இவரது புகழ் உலகெங்கும் பரவியுள்ளது. தமிழ்ப் புராண, இதிகாச, காப்பியங்களில் இருந்து சமூகம் கற்க வேண்டிய செய்திகளை நூற்றுக்கும் மேற்பட்ட தலைப்புக்களில் மேற்கொண்டுள்ளார். வில்லிசையின் ஊடாக ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மேடைகளைக் கண்டிருக்கிறார். படித்தவர்களும் பாமரர்களும் இரசிக்கும் படியாக வில்லிசை மூலம் கதை சொல்லக்கூடிய ஆற்றல் கொண்டிருப்பது இவரது பலம் ஆகும்.

வில்லிசையில் மாத்திரமன்றி மரபு வழி நாடகத்துறையிலும் ஆளுகை பெற்றுள்ளார். காத்தவராயன் கூத்து மற்றும் இசை நாடகங்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேடைகளைக் கண்டுள்ளார். சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் இவர் ஏற்கும் இயமன் வேடத்தைக் கண்டு சபையோர் கலங்குவர். அவ்வளவிற்குத் தன்னை மறந்து கதாபாத்திரத்துடன் ஒன்றிக்கும் சுபாவம் கொண்டவராகச் சின்னமணியை இனங்காட்டலாம்.

எமது வலிகாமம் கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவையின் உபதலைவராக சேவையாற்றியவர். பிரதேச கலை விழாக்கள் சிறப்புற இடம்பெறுவதற்காகத் தனது ஆலோசனைகளையும் பங்களிப்புக்களையும் அவ்வப்போது வழங்கி எமக்குப் பக்கபலமாகத் திகழ்ந்தவர். 2014இல் அச்சுவேலி பிரதேசக் கலை பண்பாட்டு விழா இராசமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் இடம்பெற்ற போது சின்னமணியின் கலைச்சேவைகளைப் பாராட்டி அச்சூர்க்குரிசில் என்ற கௌரவ விருதை வழங்கியிருந்தோம். தனது உடல் இயலா நிலையிலும் சக்கர நாற்காலியில் வருகை தந்து விருதைப் பெற்று விழாவைக் கௌரவப்படுத்தியிருந்தார். சின்னமணியின் வாரிசுகள் இன்று எம்மண்ணில் வில்லிசைக் கலையை தொடர்கின்றனர். அவரது இடத்தை நிரப்புவது இலகுவானதல்ல என்றாலும் எங்கெல்லாம் வில்லிசை ஒலிக்கிறதோ அங்கெல்லாம் சின்னமணி வாழ்வார்.

**ம.பிரதீபன்**

**பிரதேச செயலர், கோப்பாய்**

**தலைவர், வலிகாமம் கிழக்கு கலை பண்பாட்டு பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாவினோதன்சின்னமணி என்ற ஈழத்தின் கலை ஆளுமை



வில்லிசைச் சக்கரவர்த்தி கலாவினோதன் சின்னமணி என அழைக்கப்பட்டு எங்கும் அறியப்பட்ட க.நா.கணபதிப்பிள்ளை என்ற பெருங்கலைஞன் ஈழத்தில் இட்டு நிரப்ப முடியாத வெளியைத் தோற்றுவித்த ஒரு "கலைப் பேராளுமை" ஆகும். இக்கலைஞனின் இழப்பினூடு அவர் விட்டுச்சென்ற வெளியை உணர்தலும் அவரது ஆளுமைச் சிறப்பினை கோடிகாட்டுவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வடமராட்சிப் பிரதேசத்தின் மாதனை என்ற கலைச் சிறப்பு வாய்ந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்து அக்கிராமத்தின் கலை மரபுகளால் போஷிக்கப்பட்டு மேலெழுந்த கலாவினோதன் சின்னமணி, சிந்து நடைக்கூத்து , இசைநாடகம் உரைநடை நாடகம், புராண நாடகம் என நாடகத்துறையில் தேர்ந்த நடிகனாக மேற்கிளம்பியவர். ஆயினும் நாடகத்துறையை விட அவர் கையாண்ட அவருக்கு கைவந்த வில்லிசைத் துறையே அவரை இலங்கையின் பட்டி தொட்டிகள் எங்கும் நாடுகடந்தும் பாலர் முதல் பல் விழுந்தவர் வரை அறிய வைத்தது. அத்தகைய சிறப்புக்கான காரணங்களையும் அவரது கலை ஆளுமையையும் இனங்காண்து மிக மிக அவசியமாகும். காரணம் ஈழத்திற்கென்று தனித்துவமான "வில்லிசை மரபு" என ஒன்றைக் கொள்வோமாயின் அது சின்னமணியின் மரபாகத் தான் இருக்க முடியும். ஏனெனில் இன்று வரை பலரும் அவரைப் பின்பற்றியே வில்லிசையை மேற்கொண்டு வருகின்றனர். அப்பாரம்பரியத்தின் மூலவரை இனங்காண்பது வரலாற்றுக் கடமையாகும்.

## சின்னமணியின் வில்லாளுமை

வில்லிசைக் கலை என்பது ஒரு கதைகூறும் அரங்காகும். கேட்பவர்களிற்கு இசையாலும் கதை சொல்லலாலும் செவி இன்பம் தங்கு அவர்களின் கற்பனையிலே கதையினை நகர விட்டு, நகைச்சுவை, பாடல்கள் என்ற சிறப்புக்களால் சுவையினை ஊட்டி சமூகத்திற்கு அற நெறிகளை ஓதுகின்ற ஒரு கலை வடிவமாகும். கதாப்பிரசங்கம், கதாகாலட்சேபம் எனத் தொடர்ந்த கதை கூறும் அரங்குகளில் இருந்து பலவேறு விடயங்களையும் உள்வாங்கி தனித்துவமாக வெளிவந்த கலை வடிவம். இது கேட்டலுக்குரிய கலைவடிவமாகும். ஆனால் கேட்டலுக்குரிய இந்தக் கதை கூறும் அரங்கினை பார்த்தலுக்குரியதாக மாற்றிய கலைஞன் கலாவினோதன் சின்னமணி என்றால் அது மிகையாகாது.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் வில்லினிமையை நேரடியாகத் தரிசித்த அனுபவத்துடனும் திருப்பூங்குடி ஆறுமுகத்தின் வில்லிசைக் குழுவில் பக்கப்பாட்டுக் காரனாகவும் நகைச்சுவை கலைஞனாகவும் இருந்து வில்லின் வித்தையை கற்றறிந்த அனுபவலத்தோடும் இவர் 1968இல் கலைவாணர் வில்லிசைக் குழுவினை உருவாக்குவதன் ஊடாகத் தன்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவம் மிக்க கலைஞனாக முன் கொண்டு வருகின்றார். அவ்வாறு முன்கொண்டு வந்தவர் எட்டு வயதில் இருந்தே பெற்ற அரங்கியல் அறிவு, தமிழ் அறிவு இசைஅறிவு என்ற அனுபவக் கண்டறிதல்களை ஒருங்கு சேர்த்து வில்லிசைக் கலையை மேற்கொண்ட போது அது தனித்துவமான வில்லிசைக் கலையாக மேற்கிளம்புகின்றது. இந்தப் பன்முக ஆற்றல்கள் அவரது தனித்துவமான ஆளுமையில் மையங்கொண்ட போதே அவரது வில்லிசை பார்த்தலுக்குரிய வில்லிசையாகப் பரிமாணம் கொள்கின்றது. அதன் சிறப்புக்கள் ஒவ்வொன்றையும் ஆள றோக்கும் போதே அவரது தனித்துவங்களை இனங்காண முடியும். அத்தனித்துவங்களில் சில வருமாறு

## பொருத்தமான கதைத் தெரிவுகள்

தமிழ் இலக்கியம், புராணம் என்பவற்றில் இவருக்கு இருந்த தாடனமும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் அவர் தமிழின் முதுசங்களுக்குள்ளிருந்து நூற்றுக்கணக்கான கதைகளைத் தெரிந்தெடுத்து வில்லிசையாகப் பாடும் வல்லமையை அவருக்கு வழங்கியது. இதனால் இவர் மகாபாரதம், இராமாயணம், ஐம்பெருங்காப்பியங்கள், பெரியபுராணம், கந்தபுராணம் எனப் பண்டைத் தமிழ் இலக்கியங்களுள்குள் இருந்து கதைகளைத் தெரிந்தெடுத்து வில்லிசை ஆக்கினார். இக்கதைகளை தெரிந்தெடுக்கும் போது வாழ்வியல் நெறிகளை வலியுறுத்தவல்ல கதைகளாகவும் வில்லிசைக் கலையில் வடிவத்தால் சிறப்பிக்கத்தக்க கதைகளாகவும் அவற்றை இனம் கண்டார். தீர்க்க சுமங்கலி ஊடாகக் கற்பின் வலிமையை கோவலன் கண்ணகி ஊடாக அரசனின் நீதிப் பிறள்வை பட்டினத்தார் ஊடாக ஆன்மீகத்தை.. எனத் தெரிந்தெடுக்த ஒவ்வொரு கதைகளும் சமகாலத்தில் வாழ்வு நெறிகளுக்குரியவைகள் ஆக தெரிந்தெடுத்தது மட்டுமன்றி சமகாலத்தின் உதாரணங்களை நகைச்சுவைகளாக இணைத்து முன்வைத்த போது அவை அதிக தாக்க வன்மை மிக்க கதைப் பொருள்களாக மாறின.

## கதையாக்கத் திறன்

கலா வினோதன் சின்னமணியின் வில்லிசைச் சிறப்பிற்குக் காரணமாக அமைந்த மற்றொரு விடயம் அவரது ஆக்கச் சிறப்பாகும். வில்லிசைக் கதைகளைத் தானே வடிவமைக்கக் கூடியராகவும் பாடல்களை இயற்றக் கூடியவராகவும் திழ்ந்தார். சந்தர்ப்பங்களிற்கு ஏற்ப வில்லிசை அரங்கிலேயே "சுயம்பாட வல்ல" ஆளுமையையும் கொண்டவராக விளங்கினார். இலக்கியங்களில் இருந்து பிரித்தெடுத்த கதையினை வில்லிசைக்குரிய வகையில் மாற்றி அமைப்பது இலகுவானது அல்ல. எழுத்தாக்க வன்மை கொண்டவராலேயே அது சாத்தியமாகும். எதனைக் கதையாகச் சொல்வது எங்கு பாடல் சேர்ப்பது எங்கு நகைச்சுவை சேர்ப்பது என்ற நுட்பங்கள் நன்கு விளங்கியவர்களினாலேயே இக்கதையாக்கத்தினை செய்ய முடியும். கலாவினோதன் பெற்ற தமிழ் அறிவும் அரங்க அறிவும் அவருக்கு அத்திறனைச் சிறப்பாக வழங்கிய காரணத்தால் சபை வியக்கத் தக்க கதைகளை இயற்றி ஆற்றுகை செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்கும் நேரத்திற்கும் ஏற்ப அதனை நீட்டவும் குறுக்கவும் வல்லவராக இருந்தார். இலக்கியங்களில் இருந் தபாடல்கள் இசை நாடகப் பாடல்கள் போன்றவற்றையும் தேவைக்கேற்ப பயன்படுத்திய போது அவ்வாக்கங்கள் கனதி மிக்கவையாக மாறின.

## பாடல்களும் பாடும் திறனும்

வில்லிசை என்பதே பாடல்களால் காட்டப்படும் கலைவடிவம். சிறந்த சாரீர வளமும் இசைஞானமும் சாஸ்திரீய இசையறிவும் வாய்க்கப் பெற்றிருந்த கலாவினோதன் சின்னமணி அவர்களின் மதுரக் குரலில் “தந்தனத் தோம் என்று சொல்லியே..” என்ற பாடல் கேட்டால் போதும்.சபை ஒழிவந்து கூடிவிடும். அந்த அளவுக்கு அவரின் பாடும் திறன் சிறப்பானதாகவும் உணர்வுகளை வெளிப்படுத்தவல்லவையாகவும் அமைந்திருந்ததுடன் தனித்துவமான “குரல் பண்பாட்டோடு” (Voice Culture) காணப்பட்டது. அதனால் கதை சொல்லும் போதும் நகைச்சுவையை வழங்கும் போதும் பாத்திரங்களைச் சித்தரிக்கும் போதும் ஒவ்வொரு குரல் அசைவுகளையும் ஏற்ற இறக்கங்களுடனும் சஞ்சரிப்பவர். உரையில் இருந்து பாடலுக்குத் திடீரென நகர்வார்.ஆனால் சுருதி சுத்தமாக அந்தப் பாடலின் இராக தாளங்களுக்குள் அவரது குரல் மிதக்கும்.உரையும் இசையும் ( உணர்வும்) இரண்டறக் கலக்கும் அவரது பாடும் திறன் அவரது தனித்துவங்களில் ஒன்று. அது மட்டுமன்றி அவர் தெரிந்தெடுக்கும் பாடல் மெட்டுக்கள் இராகங்கள் வில்லிசைக்குரிய சாஸ்திரீயத் தெம்மாங்கு மெட்டுக்களாகவும் சங்கீதமாகவும் கிராமிய மெட்டுக்களாகவும் பல வகைமைகளில் அமைந்து கேட்பவருக்கு ஜனரஞ்சகக் கவர்ச்சியை ஏற்படுத்த வல்லவையாக காணப்பட்டன.

## பாத்திரந் தாங்கும் தன்மை

கலாவினோதன் சின்னமணி அவர்களின் வில்லிசைத் திறனில் மற்றொரு சிறப்பு அவரிடம் காணப்பட்ட நடிப்புத் திறனாகும். கதை சொல்லும் போது தேவைப்படும் இடங்களில் பாத்திரம் தாங்கி உரையாடல்களை மேற்கொள்ளும் போது பாத்திரமாகவே மாறி விடுவார். பாத்திரத்திற்கு ஏற்ற குரல் வெளிப்பாட்டினையும் உணர்வுச் சேர்வைகளையும் வழங்கி ஒரு நாடகப் பரிமாணத்தினைச் சின்னமணி வழங்க வல்லவராக இருந்தார். பாத்திரமாக உரையாடுபவர், உடனே கதை சொல்லியாக மாறுவார் .மீண்டும் பாத்திரமாக மாறுவார். சில வேளைகளில் வெறும் முக அசைவுகளாக மட்டும் பதில் அளிப்பார். உதாரணமாக திருநீலகண்டரின் வெற்றிலை வாயுடன் உரையாடுவதனைக் குறிப்பிடலாம். இச் சிறப்புக்களாலேயே அவரது வில்லிசை பார்த்தலுக்குரிய வடிவமாகப் பரிணமித்தது.

## நவரச வெளிப்பாடு

கலை என்பது உணர்வுகளின் பாற்பட்ட அந்த உணர்வுகளின் சங்கமம் இன்றேல் அது கலையாகாது என்பது நாட்டிய சாஸ்த்திரம் கூறும் விதி. இதனை நன்குணர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாவினோதன், பரதர் நாடகக் கலைக்குக் கூறிய இலக்கண வழி சிந்திக்கத்தக்க வகையில் ஸ்தாயி பாவங்களை ஏற்படுத்தி அதன் வழி வில்லிசை மூலம் இரசானு பாவங்களைத் தோற்றுவித்தார். சிருங்காரம், நகை, கருணை, ரௌத்திரம், வீரம், அச்சம், பீபத்சம், அற்புதம், சாந்தம், என்னும் ஒன்பது சுவைகளையும் அவர் தனது வில்லாளுமை மூலமாகத் தோற்றுவித்தார். அவரது நகைச்சுவையை கண்டும் கேட்டும் விழுந்து விழுந்து சிரிக்கும் மக்கள் அவர் சோகத்தை வெளிப்படுத்தும் போது சிலையாகி விடுவார்கள். இவ்வாறான இரசானுபாவங்கிளின் ஊடாக பார்வையாளரைச் சின்னமணி கட்டிவைத்திருந்தார் என்று தான் கூற வேண்டு.

## பண்புடைய நகைச்சுவை

வில்லிசையின் சிறப்பு எந்தளவுக்கு கதை சொல்வதில் அடங்கி இருக்கிறதோ அந்தளவுக்கு நகைச்சுவை உணர்வுகளின் ஊடாக நகர்வதிலும் தங்கி இருக்கிறது. சின்னமணி இதனை நன்குணர்ந்து தனது பாடல் குழுவினருடனும் தனித்தும் நின்று நகைச்சுவையை அள்ளி வழங்க வல்லவராக இருந்தார். நகைச்சுவை என்பதற்காக பண்பிழந்த பகிடிகளை ஆபாசாமாக வெளிப்படுத்திய கலைஞர்கள் மத்தியில் பண்பு தவறாது நகையுணர்வை வில்லிசையில் பதிவு செய்தார்.புராண இதிகாசக் கதை மாந்தர்களை மேல்வரிச் சட்டங்களாக முன்னிறுத்திக் கொண்டு, வாழ்வு நெறி தவறும் சமகால மாந்தரின் வாழ்வியலை நகையுணர்வுடன் ஒப்பீடு செய்தார். பருத்த அவரது உடலத்தின் அசைவுகள் முகபாவம் உதட்டசைவு கண்ணசைவு அவற்றுடன் இணையும் நளினம் மிக்க குரல் பாங்கு என்பவற்றைப் பயன்படுத்தி நகைச்சுவை உணர்வை சிறப்பாக வெளிப்படுத்தினார். அதே வேளை சில கணங்களுக்குள் நகையுணர்வில் இருந்து மாறிப் பாத்திரமாகக் கதைசொல்லும் கதை சொல்லியாக மாறிவிடுவார். இது அவரது சிறப்பு ஆளுமைகளுள் ஒன்று.

## கதைசொல்லும் பாங்கு

வில்லிசைச் சக்கரவர்த்தியான சின்னமணியின் வில்லிசைச் சிறப்புக்கள் அனைத்தும் உட்கொள்ளப்பட்ட கதை சொல்லும் பாங்கே அவரைத் தனித்துவம் வாய்ந்த கலைஞனாக அவரை நிலை நிறுத்தியது எனலாம். “தந்தனத்தோம்” என்று தொடங்கி மங்களம் பாடும் வரை அவர் தனக்கென தனிப்பாணியான அளிக்கை முறை ஒன்றினை வைத்திருந்தார். காப்புப் பாடி முடிந்ததும் நகைச்சுவை கலந்த உரையாடலாக ஆரம்பித்து கதைப் பொருளை அறிமுகம் செய்வார். கதையின் முக்கிய கட்டங்களிற்குக் கனதியை ஏற்படுத்திக் கொண்டும் கேட்பவர் சோரா வகையில் நகைச்சுவையை இணைத்துக் கொண்டும் கதையை வளர்ப்பார். கதையின் உச்சக்கட்ட உணர்ச்சியில் பாடலால், குரலால் வாத்திய இசைப்பால் ஒரு வேகத்தினையும் கனதியையும் செலுத்தியவாறு கதையைக் கொண்டு சென்று முடிப்பார். இந்தப் படிமுறையிலும் ஒரு நாடகப்பாங்கு காணப்பட்டது. அது மட்டுமன்றி அவர் இலாவகமாக அமரும் முறைமை வில்லின் நாணினைத்தட்டி தாள கதிகளைப் பிறப்பிக்கும் முறை வில்லைத் தனது உடலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அங்கம் போல பிரயோகிக்கும் முறைமை தனது குழுவினருடன் எதிர்வினையாற்றும் தன்மை பார்போரின் பதிற்குறிகளிற்கு இடம் தந்து பார்ப்போரை தன் ஆற்றுகையுடன் கட்டி வைத்திருக்கும் தன்மை , கதைச் சூழ்விற்கு ஏற்ப சூழல் ஒலிகளை வில்லிசையால் பிறப்பித்து அந்தச் சூழமைவிற்குள் பார்ப்போரைக் கொண்டு வரும் திறன் (உதாரணமாக மகாபாரதம் நிகழ்த்தும் போது குதிரைப் படைகள், யானைப்படைகள்.. போன்ற சூழல்களை வில்லின் நாணில் இருந்தே தோற்றுவிக்கும் தன்மை ) போன்ற அனைத்துத் தனித்துவமான பண்புகளும் குவிந்த வில்லிசைப் பாணி சின்னமணி என்ற கலைஞன் தானே கண்டுருவாக்கிய பாணியாக எம்முன்னே நிற்கின்றது. இந்தச் சிறப்பில் அவரோடு இணைந்து நின்ற ஞானம் மிக்க இசைக் கலைஞர்களுக்கும் பக்கப்பாட்டுக் கலைஞர்களுக்கும் பெரும் பங்குண்டு. அத்தகையை பக்தியுடைய குழுமத்தை தோற்றுவித்த கலை ஆளுமையாகவும் சின்னமணி திகழ்ந்தார்.

இவ்வாறு ஈழத்திற்கென்ற வில்லிசைப் பாணி என இதனைக் கூறக்கூடிய வகையில் அவர் உருவாக்கிய வில்லிசை பாங்கு அமைந்து விட்டிருக்கின்றது. அதனால் தான் நாடு கடந்தும் இக்கலையினால் புகழ் பெற்றார். இன்று வில்லிசை செய்யும் எவரும் சின்னமணி என்ற ஆளுமை பிறப்பித்த பாணியில் இருந்து விலக முடியாதவர்களாக அவரின் படியோசைகளாகவே மாறி நிற்பதனைத் தான் அவதானிக்க முடிகின்றது.

## சின்னமணியின் நாடகப் பின்புலமும் ஆளுமையும்

கலாவினோதன் சின்னமணி அவர்களை வில்லிசைக் கலைஞனாகவே இனங்கண்டு போற்றினாலும் அடிப்படையில் அவர் நாடகக் கலைஞன். அவரது வில்லிசைக் கலையின் சிறப்புக்கு ஊற்றாக அமைந்தது நாடகமே. நாடகத்திலும் அவர் பன்முகங் கொண்ட கலைஞனாகவே திகழ்ந்தார். மாதனை என்ற கலைக் கிராமத்தில் எட்டு வயதிலேயே அவரது அரங்கப் பிரவேசம் நிகழ்ந்தது. பாலகாத்தானாக நடித்தவர். காத்தவராயன் கூத்தில் பல பாத்திரங்களையும் தாங்கி நடிக்கும் நடிகராக வளர்ந்தார். அவரது இரத்தத்தில் சிந்து நடைக்கூத்து மரபு ஊறிக் கிடந்தது. அவரது மாமனாரா கீதாஞ்சலி நல்லையைா பிரபலமனா நடனக் கலைஞர் ஆவார். அவர் மூலமாக இவர் நடனக் கலையையும் இசைக் கலையையும் கற்றுக்கொண்டார். மதனைக் கலாமன்றம் உருவாகிய பின் இவர் சிறந்த இசைநாடகக் கலைஞனாக மாறுகிறார். நாரதராக, நட்சத்திர தரகராக, அயலாத்துப் பிள்ளையாக, இயமனாக, மந்தரையாக ... பல பாத்திரங்களை தாங்கி நடித்திருந்தார். ரி.மகாலிங்கம், எஸ்.இராசதுரை, வி.கிருஷ்ணபிள்ளை போன்ற பல மாதனை இசைநாடகக் கலைஞர்களுடன் இணைந்து நடித்துச் சின்னமணி பட்டை தீட்டப்பட்டார். சிறப்பாக அவரது சகோதரன் க.நா.நவரத்தினம் சிறந்த நடிகனாக நின்றும் அவருக்கு ஊக்க சக்தியாகவும் நின்று தூண்டினார். இவ்வாறு இசைநாடகத் துறையில் தனித்துவமான கலைஞனாக மேற்கிளம்பியவர் "இயமன்" என்ற பாத்திரத்திற்குரிய ஸ்பெசல் நடிகன் ஆனார்." இயமன் சின்னமணி" என்று அழைக்கப்படும் அளவிற்கு அவரது நடிப்புத் திறன் உயர்ந்தது. தீர்க்க சுமங்கலி நாடகத்தில் அவர் இயமனாகத் தோன்றும் போது கன்னாங்கள் கறுத்து கண்கள் கோபத்தால் சிவந்து முத்தலைச் சூலத்தைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் தாங்கி வெடிச்சிரிப்புக்களை உதிர்த்துக்கொண்டு ஆக்ரோசமாக நுழையும் போது சிறுவர்கள் பயந்து நடுங்குவர். அந்த அளவுக்கு அப்பாத்திரமாகவே மாறி விடுவார். அவரது இயல்பான தோற்றமும் சாரீர வளமும் அவருக்கு மேலும் ஒரு படி பலமாக அமைந்தது. அப்பாத்திரத்திற்கூடாக அவர் வெளிப்படுத்தும் வீரம் கோபம் போன்ற உணர்வுகளிற்கு அப்பால் சாவித்திரியிடம் தோற்றுப் போகும் போது வெளிப்படுத்தும் "கோளை" உணர்வு வியக்கவும் நகைக்கவும் வைக்கும். இவ்வாறு இசைநாடகத் துறையில் தனக்கெனத் தனித்துமான முத்திரையினைப் பதித்த இவர் உரைநடை நாடகங்களிலும் தலை சிறந்து விளங்கினார்.

எஸ்.ரி.அரசுடன் இணைந்து கலைவாணர் நாடக மன்றத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக செயற்பட்ட இவர் கலைவாணர் நாடக மன்றம் மேடையேற்றிய வரலாற்றுப் புராண நாடகங்களிலும் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துபுகழ் பெற்றார். திப்புசுல்தான், சரியா தப்பா, சாம்ராட் அசோகன், வீரமைந்தான் போன்ற பல நாடகங்களிலும் இவரது நடிப்புப் பேசப்பட்டது.

இவ்வாறு பன்முகத் தன்மையான தனது அரங்கியல் அனுபவங்களுக்கூடாகவே அவர் வில்லிசைத் துறைக்குள் வந்தார். தொல்காப்பியத்தில் நாடக வழக்கு என்பதற்குக் கூறப்படும் "சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்தே வந்தனவாகத் தொகுத்துக் கூறப்படுதல்" என்ற அரங்க அழகியலின் தத்துவம் கலாவினோதன் சின்னமணியிலும் மையங்கொண்டது. அவர் பெற்ற பல்வகை அனுபவங்களும் தனித்துவமான வில்லிசைக் கலையைத் தோற்றுவிக்கும் ஒரு சக்தியைத் தோற்றுவித்தன. அந்தக் கலையாளுமையின் இழப்பினூடு நோக்கும் போது அவர் போல் இன்று எவருளார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

கலையைப் படைத்தது மட்டுமன்றி கலைக்காகவே வாழ்ந்தது மட்டுமன்றி கலைகள் பற்றி தெளிவைக் கொண்டவராக விமர்சகராக ஆய்வுநிலையில் கருத்துக்களை எடுத்துரைக்க வல்லவராக ஒரு கலைப் பண்பாட்டாளனாக வாழ்ந்த சின்னமணி என்ற கலை ஆளுமை ஈழத்தில் மறக்க முடியாத முதுசம்

கட்டுரைக்கு உதவியவை


1. வில்லிசைப்புலவர்.... முகநூல் - த.றொபேட்
2. கூத்தரங்கம் 24 (செயல் திறன் அரங்க இயக்கத்தின் வெளியீடு)
3. இசைநாடக கூத்து மூத்த கலைஞர் வரலாறு — செ.மெற்றாஸ்மயில்
4. நேர்காணல்கள்

   த.றொபேட், விரிவுரையாளர், யாழ்.பல்கலைக் கழகம்

   சி.செந்தூரன், ஆசிரியர், பரி.யோவான் கல்லூரி



**யோ.யோண்சன் ராஜ்குமார்**

**பிரதி இயக்குனர்,**

**திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்



எனது ஊர் காரைநகர். இந்த ஊர் மக்கள் மேளக்கச்சேரி, வில்லிசை, கூத்துபோன்ற கலைகளை விடிய விடிய இரசிக்கக்கூடிய மனோபாவமுடையவர்கள். அந்த வகையில் சிவகாமி அம்மன் கோவில் முன்றலில் பாய், தலையணையுடன் செல்லும் மக்களுடன் நானும் எனது குடும்பத்தினரும் சென்று பூதத்தம்பி நாடகத்தினை வருடம்தோறும் இரசித்திருக்கின்றோம்.

பத்து மணிக்குத் தொடங்கும் நிகழ்வு விடியும் வரை நடைபெறும். அதே போல மேளக்கச்சேரியை இரசித்த பின்பு, வில்லிசைக் கலையில் தனக்கெனத் தனிமுத்திரை பதித்த கலைஞரான சின்னமணி ஐயாவின் வருகைக்காக காத்திருக்கும் ஆயிரக்கணக்கான இரசிகர்களில் நானும் ஒருவர் என்பதை இங்கே நினைவுகூருகின்றேன்.

ஏழு வயது முதல் நான் அவரது இரசிகை. அவர் பாதங்கள் படாத ஆலயங்கள் காரைநகரில் இல்லை என்றே கூறலாம். வாரிவளவுப் பிள்ளையார் கோவில், நீலிப்பந்தனை அம்மன் கோவில், மடத்துக்கரை அம்மன் கோவில் , திக்கரை முருகமூர்த்தி கோவில் பாலாவோடை அம்மன் கோவில், கருங்காலி முருகன் கோவில் என அனைத்து ஆலயங்களிலும் அவரது குரல் ஒலித்திருக்கின்றது.

மேளக் கச்சேரி முடிந்ததும் அவர் வருகைக்காக மக்கள் காத்திருப்பதும் அவர் வரும் காரைப் புடைசூழ்ந்து நின்று வரவேற்பதும் நிகழ்வு முடிந்த பின் அவரைக் கிள்ளிப் பார்க்காத குறையாகச் சிறுவர்களும், இளைஞர்களும் துரத்திச் சென்று காரில் ஏறும் வரை பார்த்து இரசிப்பதும் இது போதாதென்று சில இளைஞர்கள், சிறுவர்கள் கார் போகும் திசையில் தம்மால் முடியும் வரை ஓடிச்சென்று வழியனுப்பி விட்டும் வருவார்கள்.

அவர் வில்லிசை நிகழ்த்துமிடத்து எல்லோருடைய கவனத்தையும் தன் வசம் திருப்பி வைத்துக்கொள்வார். கண்ணகி, சாவித்திரி போன்ற கதாபாத்திரங்களை விவரிக்கும்போது உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் சொரிந்து அந்தப் பாத்திரமாகவே மாறியதை நான் பார்த்திருக்கின்றேன். பின்பு திடீரெனச் சிரிப்பார். நகைச்சுவையாகப் பக்கப்பாட்டுப் பாடுபவருடன் பேசுவார். மீண்டும் பாடுவார். வில்லிசைப்பார். இது எவ்வாறு என்று நான் வியந்திருக்கின்றேன். கதைகளோடு ஒட்டிய பாடல்களை மிகவும் இனிமையாக கணீரென்ற குரலில் பாடுவது அவருடைய இன்னொரு பலம் என்றே கூறவேண்டும். வள்ளி, கண்ணகி, பட்டினத்தார், அருணகிரிநாதர், பார்வதி கல்யாணம், போன்ற கதைகள் என்னால் மறக்கமுடியாதவை. மேலும் மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற கதைகளையும் பத்து நாட்கள் தொடர் வில்லிசையாக நிகழ்த்தியிருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாடகம் நடிப்பதிலும் சிறந்து விளங்கியுள்ளார். இயமன் வேடமிட்டு நடித்ததை நல்லை ஆதீனத்தில் பார்த்திருக்கின்றேன். தோற்றப் பொருத்தமும் பாடும் திறனும் குரல் வளமும் நடிப்பும் கம்பீரமும் ஒருங்கே அமையப்பெற்ற கலைஞனை இனி நாம் எப்போது காணப்போகின்றோம். இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என எல்லா நிலையினரையும் தன் தனித்துவமான திறமையினால் கட்டுப்பட வைத்த சின்னமணி ஐயா மீளாத் துயில்கொண்ட காட்சியைப் பார்த்த போது என் இதயம் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றது.

வில்லிசையில் சின்னமணி ஐயா ஒரு சகாப்தம். அவரது இடம் வெற்றிடமே. அதை எவராலும் எளிதில் நிரப்பிவிட முடியாது. அவரது திறமையும், தோற்றமும், கருத்துக்களும், மட்டுமே என்றும் நிங்காத நினைவலைகளாக மனதில் பதிந்துள்ளன.

அன்னாரின் மறைவு கலையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரது குடும்பத்தினருக்கும் இரசிகர்களிற்கும், எனது துயரினைப் பகிர்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியுற்று இறைவனடி சேர நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

**செல்வி பரமேஸ்வரி கணேசன்,**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**இசைத்துறை,**
**யாழ்.பல்கலைக் கழகம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரங்கியல் ஆளுமை – சின்னமணி"



ஈழத்தின் மரபு வழி நாடகங்களில் சிறப்பு மிக்க நடிகனாக விளங்கிய கணபதிப்பிள்ளை சின்னமணி அவர்கள் தமிழ் அரங்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க அரங்க ஆளுமையாகக் காணப்படுகின்றார். சிறப்பாக இசை நாடகங்களில் இயமன் பாத்திரம் ஏற்று நடித்துத் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட காரணத்தால் "இயமன் சின்னமணி" என்ற பட்டப் பெயரும் அவருக்குண்டு. அத்தகைய கலைஞன் எம்மோடு இல்லை என்ற செய்தி நாடகக் கலைஞர்கட்கும் கலை இரசிகர்களிற்கும் பேரிடியாகவே இருக்கின்றது.

தமிழ் அறிவும் சிறப்பான குரல் வளமும் சுருதி, தாள, இராக, பாவ ஞானமும் கொண்ட நடிகன் அவர். தான் ஏற்கும் பாத்திரத்திற்குப் பொருந்தும் வகையிலான உடல் வாகு கொண்டவர். சத்தியவான் சாவித்திரி இசைநாடகத்தில் இயமன் பாத்திரம் ஏற்று நடிக்கும் போது , அழகான வேடவுடை ஒப்பனைப் புனைவுகளிற்கும் மேலாக அவரது உணர்ச்சி வெளிப்பாடுகளால் எல்லோரையும் மெய் சிலிர்க்க வைத்து விடுவார். சக்தி வாய்ந்த கண்கள், புருவங்கள், கன்னங்கள், உதடுகள் அனைத்தும் பாத்திரத்தின் சூழமைவுகளிற்கு ஏற்ப சுவை ஊட்டுவதாய் இருக்கும்.

பாடல்களையும் உரையாடல்களையும் வெளிப்படுத்துகின்ற போது தெளிவும், நாடக பாணியும் பாத்திரத்தின் தனித்துவமும் புலப்படச் சித்தரிப்பார். தமிழ் மொழியில் புலமையாளனாக இருந்த படியால் நாடகங்களது எழுத்துரு நிலைக் கூறுகளை நன்கு அறிந்தவராகவும் காணப்பட்டார். நாடக மேடைகளில் பாத்திரம் தாங்கினால் துணைப்பாத்திரங்களை ஏற்று நடிக்கும் நடிகர்களிற்குச் சற்றுப் பதற்றமாகவே இருக்கும். ஏனெனில் சின்னமணியின் நாசூக்கான உரையாடல் பாடல்களிற்கு முகம் கொடுப்பதற்கு தனித்த ஆழமான அனுபவம் அவசியம் என்றே கூற வேண்டும்.

இசைநாடகத்தை மேடையேற்றம் செய்வதற்கு நாடகக் குழுவினரை நாடுகின்ற ஒப்பந்தக்காரர்கள் "சத்தியவான் சாவித்திரி நாடகம் போட முடியுமா?" என்று கேட்பதோடு இமன் பாத்திரத்தை சின்னமணி ஏற்கவேண்டும் என்றும் குறிப்பிட்டு அச்சவாரம் கொடுப்பதும் உண்டு. நாடகம் அரங்கேற்றப்படும் இடத்திலும் "சின்னமணியும் வாராராம்" , "சின்னமணி தான் இயமனாம்" , "சின்னமணி வந்தவரா" என்றெல்லாம் இரசிகர்களது வாய்கள் முணுமுணுக்கும். நாடகத்தின் துணை நடிகர்களையும் வாத்திய இசைக் கலைஞர்களையும் ஒழுங்கு செய்கின்ற போதும் அக்கலைஞர்கள் இயமன் பாத்திரம் யார் நடிக்கப்போகின்றார்? என்று கேட்பர். அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னமணி தான் அப்பாத்திரத்தை ஏற்கின்றார் என்று அறிந்தால் திருப்திப்பட்டுக் கொள்வர். அந்த அளவிற்கு இரசிகர்கள் மட்டிலும் கலைஞர்கள் மட்டிலும் சின்னமணி ஐயாவின் பால் உள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது.


அவர் இரசிகர்களையும் கலைஞர்களையும்கலை இரசனையால் திருப்திப்படுத்தக் கூடியவராக விளங்கினார் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து முத்தமிழிற்கும் பெருமை தேடித்தந்து " அரங்க ஆளுமையான" அற்புதக் கலைஞன் அவர். சமகாலக் கலைஞர்களிற்கும் எதிர்காலச் சந்ததியினரிற்கும் பல பாடங்களைச் சொல்லியும் விட்டும் சென்றுள்ளார்.

அவரது ஆன்மா சாந்தியடைவதற்கு நாமும் கலை படைத்துத் தமிழ் வளர்போம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**தைரியநாதன் ஜஸ்ரின்**
**ஆசிரியர்**
**கிளி.கறுக்காய்தீவு மகா வித்தியாலயம்,**
**பூநகரி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாவினோதன்சின்னமணி ஐயா ......



மாதனையில் உதித்தாய் மனைபுகுந்தாய் அச்சுவேலியில்
அன்பர்களின் ஆசிபெற்று ஆங்கில ஆசிரியரானாய்
திருப்புங்குடி ஆறுமுகத்தின் திருப்திநிறை நகைச்சுவைக் கலைஞன் நீ
கலைச் சிறப்பாலும் கலைத்திறனாலும் கலைவாணரிடம் கலைபயின்றாய்
ஆற்றலின் வேகத்தால் ஆற்றுகைக் கலைபுகுந்தாய்
சந்நிதியில் சாதனை கொண்டு சன்றோர்கள் மத்தியில் நின்று
இதிகாசம் புராணம் இராமாயணம் பாரதம்
நீதிநூல் திருக்குறள் நாலடியார் நாளைய சரித்திரம்- என

இலக்கியத்தை இன்சுவையாய் இலங்கை சிங்கப்பூர் மலேசியா கனடா சுவிஸ்–என
உலகத்திற்கு உரைத்துநின்ற உலகம் போற்றும் உத்தமன் நீ
வில்லிசைக்கோர் வித்தகன் தெள்ளுதமிழ் சொல்லெடுத்து
தித்திக்கும் வில்லிசையால் திக்கெட்டும் உன்குரல் கேட்க வைத்தவன் நீ
அடக்கமும் அவதானமும் ஆளுமையும் அன்பும் அறிந்தவர்
ஊருக்கு உதவும் உத்தமன் உயர்வுக்கு வழிகாட்டியே உயர்ந்தவன்
கலைஞரை மதித்துக் கரம்குவிப்பீர் களங்கமற்ற கதைகதைப்பீர்
இயலிசை நாடகமும் இயல்பான வாழ்வியலும்


நவரசக் கலையுடன் உம் நாவாலே வெளிப்படும் - அதற்காக
உமக்குக் கிடைத்த் பட்டங்களோ பல உள
அவற்றில் சில இவை வில்லிசை வேந்தன், வில்லிசைச் சக்கரவர்த்தி
வில்லிசைத் திலகம், வில்லிசைப் புலவர் வில்லிசைப் பேரொளி,
பல்கலை வேந்தன் முத்தமிழ் மாமணி, முத்தமிழ் வித்தகன்
நவரசக் கலைஞன் ஜனரஞ்சக நாயகன் - என எத்தனை
உம்பிரிவால் உளம்வாடி உம்மையே தினம்நாடும்
சிஷ்யர்கள் நாங்கள் உம்பணியை நாம் தொடர்வோம்

ஊக்கமுடன் செயற்படுவோம்
உயிருடன் உள்ளபோதே ஊக்குவித்தீர் வில்லிசைக்காய்
ஆற்றுகையின் அரங்கேற்றம் கண்டீர் ஆசிகூறி அரவணைத்தீர்
நீர்சொன்னவிடையங்கள் நின்னவன் மனதில் உண்டு உம்
உடல்மட்டும் பிரிந்ததய்யா உயிர் பிரியவில்லை
உலகம் போற்றும் உத்தமரை என்று காண்போம்

**உமையிழந்து பரதவிக்கும் சிஸ்யன்**
**நாகராஜா மதியழகன், கொக்குவில்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் உயிர் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்




கலையுலகத்தில் வந்து உதித்தவரே எங்கள் கலைமணியே
என்றும் நாதமுடை சின்னமணியே வில்லுக்கு அதிபதியே
கலைகள் பல கற்றுத்தந்த கணபதியே
உள்ளத்தில் குழந்தை..
உருவத்தில் கார்முகில் வண்ணன்
எங்கள் கலைவாணரே
காவியம் படைத்திட்ட வில்லிசை வேந்தனே
நீங்கள் வில்லெடுத்து அடிக்கும் அழகு எவனுக்கு வரும்
இந்த வில்லழகு உங்கள் தனியழகு

வேடம் என்று தரித்தால்
நிஜமாகி விடும் உங்கள் உருவம்
காலனவன் வேடம் கொண்டீர்கள்
கதிகலங்கி விட்டான் காலனவன்
இயமனுக்கு இயமனாம் என்று
தருணம் பார்த்திருந்தானோ காலனவன்
பாசத்தை வீசி உயிரை எடுத்து விட்டான்

இனி யாரையா உங்கள் பணி தொடர
எவனும் இல்லை வரவும் போவதும் இல்லை
எங்கள் உயிர் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

அ. விஜயநாதன்,
அச்சுவேலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்து வில்லிசைக்கலையின் தொடக்கமும் முடிவும்அவரே

எல்லோரும் சின்னமணி ஐயாவைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதுகின்றார்கள். அவரின் வலது பக்கத்தில் இருந்தவன் நான். ஒன்றல்ல இரண்டல்ல இருபத்து மூன்று ஆண்டுகள். கிட்டத்தட்டக் கால் நூற்றாண்டு. எனது என்னங்களை எழுதினால் அது எண்ணமுடியாத அளவு பக்கங்களைக் கொண்டதாகத் தான் விரிந்து செல்லும். ஏனெனில் என் மனதுள் அனலாகக் கிடக்கும் அவர் பற்றிய நினைவலைகள், வரலாறுகள், பட்டறிவுப் பதிவுகள் ஏராளம் ஏராளம். அவை அனைத்தும் நான் நேரடியாகப் பெற்றுக்கொண்டவை. உயிர்ப்போடு துடித்துக்கொண்டிருப்பவை. அந்த உணர்வுகளை வெறும் வார்த்தைகளால் வெளிப்படுத்தி விட முடியாது.

அவர் ஒரு அவதார நாயகன். கலைஞனாகவே படைக்கப்பட்டவர். ஈழத்தாயின் மடியில் தவழ்ந்த ஞானக் குழந்தை அவர். ஒன்று இருந்தால் ஒன்று இல்லை எனும் குறைபாடுகளோடு மேடைக்கு வரும் கலைஞர்களையே நாம் இங்கே காண்கின்றோம். ஆனால் செந்நெறிக் கலைஞானத்தோடும் நாட்டாரியல் கூறுகளின் பேராளுமையோடும் என எல்லா விதமான கலை வளங்களோடும் கலையியல் வனப்போடும் வியத்தகு கலைஞராக எம் கண்முன்னே வாழ்ந்த வில்லிசையின் கடவுள் அவர்.

ஒருவர் இறந்து விட்டால், இது ஒரு பேரிழப்பாகும், ஈடுசெய்ய முடியாததாகும், மிகப்பெரிய இடைவெளியாகும், இட்டு நிரப்பப்பட முடியாததாகும், இப்படி ஒருவர் இனிமேல் இல்லை என்றும் இன்னும்பல விதமாகவும் கவலையுடன் கூறிக் கொள்வோம். என்னைப் பொறுத்த வரையில் இவை அனைத்தும் சின்னமணி ஐயாவிற்குத் தான் மிகச் சரியாகப் பொருந்தி இருக்கின்றன என்றே எண்ணத் தோன்றுகின்றது.

வில்லிசைக் கலையின் தொடக்கமும் முடிவும் அவரே தான். நல்லூர் கந்தன் திருவிழாக் காலத்தில் கந்தன் ஆலயத்தைச் சுற்றியிருக்கும் ஏனைய சிறிய ஆலயங்களில் இசைச் சொற்பொழிவுகள், பேச்சுக்கள், இசைக் கச்சேரிகள் நடைபெறுவது வழமை. அந்த நிகழ்வுகளை எவரும் விரும்பிப் பார்ப்பதில்லை என்பதும் வழமை. இது யாவரும் அறிந்ததே. சின்னமணி ஐயாவிற்கு முந்தைய காலத்து வில்லிசை நிகழ்வுகளின் நிலையும் இப்படித்தான் இருந்தது. (தகவல் - எஸ்.ரி.அரசு)

ஆனால் மக்கள் வெள்ளத்தின் நடுவே வில்லிசை நிகழ்த்தி அந்தக் கலையை ஊரறியவும் உலகறியவும் செய்து வெற்றிவாகை சூடிய வில்லிசையின் பகலவன் அவர். ஒரு இரவில் நான்கு ஐந்து இடங்களில் வில்லிசை நிகழ்த்தியவர் ஈழத்தில் இவர் மட்டுமே. பொது மக்களின் இரசனைக்குரியதாக வில்லிசைக் கலையை மாற்றியமைத்து வில்லிசைக் கலைக்கு இலக்கணம் வகுத்த "வில்லிசை ஞானி " அவரே தான் என்று ஆயிரம் முறை சொன்னாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது வில்லிசை நிகழ்வுகளால் ஆலயத் திருவிழாக்களும் அந்தக் காலத்தில் புதுப்பொலிவு பெற்றன. இவர் தொடக்கி வைத்த வில்லிசைப் பண்பாடு, அளிக்கை முறைமை என்பன தமிழ் மக்களை மெய்சிலிர்க்க வைத்தது. எல்லோரையும் பார்க்கத் தூண்டியது.

கல்வி அறிவில்லாத, சமய அறிவு இல்லாத தீய பழக்கங்களைக் கொண்டவர்கள் கூட இவரது வில்லிசை மீதான ஆர்வத்தினால் பார்வையாளராகி, இவரது இரசிகராகி ஆன்மீகக் கருத்துக்களையும் சமய வரலாறுகளையும் அறிந்து கொண்டனர் என்பதும் இவரது வில்லிசையால் ஏற்பட்ட பெரும் மாற்றங்களும் பயன்களும் ஆகும். ஏனெனில் இவரது வில்லிசை ஓர் இடத்தில் நடைபெற இருக்கிறது என்றால் அன்று காலையில் இருந்தே இவரது ஆற்றுகைத் திறன்கள் பற்றிப் பேசத்தொடங்கும் ஊர் மக்களின் ஆரவாரம் வில்லிசை முடிந்தும் பல நாட்கள் வரை தொடரும்.

அவர் வில்லிசையை ஆற்றுகை செய்யும் முறை என்பது அதி அற்புதமானது. இசை,நடனம், நடிப்பு, மொழி, சமயம், சமூகம் எனும் பல் துறைகளில் இருந்த ஆழமான தேடலும் பயிற்சியும் அவரை அற்புதமான வில்லிசையாளன் ஆக்கியது என்பதை விட இவையனைத்தும் கலந்த அவரது ஆற்றுகை வெளிப்பாடு என்பது அங்கம் அங்கமாக விரித்துரைக்கப்படவும் ஆராயப்படவும் வேண்டியது ஆகும். ஏனெனில் கதைக்கேற்றவாறு தன்னையும் தன்னிடம் இருக்கும் கருவிகளையும் துணைக் கலைஞர்களையும் மாற்றி விடும் ஆற்றல் கொண்டவர் என்பதுடன் சபையில் இருப்போரையும் கதையின் மாந்தர்கள் ஆக்கும் கலைநுட்பம் கொண்டவர் அவர்.

கலாவினோதன் அவர்கள் வில்லிசைக் கலையை மட்டும் தனதாக்கிக் கொள்ளவில்லை. உயிர் கவரும் இயமன் பாத்திரத்தை இசைநாடகங்களில் நடிப்பதிலும் இலக்கணம் வகுத்துத்தும் தந்தார். பாடல் பாடத்தெரிந்த இயமன் நடிகருக்கு வசனம் வராது. வசனம் வந்தவருக்குப் பாடல் வராது. இரண்டும் வந்தவருக்கு நடிப்பு வராது. இவை அனைத்தும் இருப்பவரிற்குக் குரல் பேசாது. ஆனால் எல்லாம் ஒருங்கே கைவந்த இயமன் நடிகர் சின்னமணி ஐயா ஒருவர் மட்டுமே என்று அடிக்கடி என்னிடம் கூறியவர் ஆர்மோனியக் கலைஞர் அமரர் பிலிப் ஜோன் கபாஸ் அவர்கள்.

இயமனுக்குரிய பாடல்கள் கடினமானவை. லயநுட்பம் நிறைந்தவை. மிகவும் சுவையானவை. சந்தம் கொண்டமைந்தவை. செந்தமிழில் இருப்பவை, பல அடிகள் கொண்டவை. இவை அனைத்தும் சின்னமணி ஐயாவின் குரலிலும் நடிப்பிலும் வெளிப்பட்டால் பார்வையாளரை விட மகிழ்ச்சியடைவோர் பக்கவாத்தியக் கலைஞர்களே. ஏனெனில் வேறு எவராவது இயமனாக நடித்தால் பக்கவாத்தியக் கலைஞர்களின் உயிரை அல்லவா பறித்து விடுகின்றார்கள். ஈழத்து இசைநாடகக் கலையின் வரலாற்றில் இயமன் என்னும் பாத்திரத்திற்கு உயிர்ப்பூட்டிய இவரது பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

நமது தாய் நாட்டின் பட்டி தொட்டியெங்கும் ஓங்கி ஒலித்த குரல் 04.02.2015 அன்று ஓய்ந்து போனது. வில்லிசையின் மணி மகுடம் சாய்ந்து போனது. கதை கதையாய் அலையடித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ்ச் சமுத்திரம் காய்ந்து போனது. கலாவினோதன் என்னும் ஆலமரம் வேரறுந்து வீழ்ந்து போனது.

ஒவ்வொரு ஈழத் தமிழனின் இதயத்திலும் பெரும் புகழோடு குடியிருக்கும் அந்தத் தேசியக் கலைஞனின் மறைவு ஈழத் தமிழர் மத்தியிலும் புலம் பெயர் உறவுகள் மத்தியிலும் பெரும் துயரமாகவும் வலியதாகவும் உணரப்பட்டது.

ஆனால் தமிழ்ப் புத்திஜீவிகள் என அழைக்கப்படுவோர்கள், பெரும் பதவிகளில் இருப்போர்கள், தமிழ்த் தேசியம் பற்றி வரிக்கு வரி முழக்கமிடுவோர்கள் என எவரும் தமது கண்துடைப்பு அஞ்சலிகளை இவரிற்கு வெளியிடவில்லை. ஏனெனில் இவரது பெறுமதியை உணரும் தகைமையுடையோராகவோ தமிழர் பண்பாடுகளைத் தெரிந்தவர்களாகவோ கலையுணர்ச்சி கொண்டவர்களாகவோ அவர்கள் எவரும் இல்லை.

ஆனாலும் இந்தக் கலைஞனின் புகழ் ஈழதேசம் உள்ளவரை நீடு வாழும். அவர் மறைந்த நாளான பெப்பிரவரி நான்கினைத் "துக்க நாளாகவே" ஈழத்துக் கலைத்துறையின் கடைப்பிடிப்பர். வரலாறு இவரை நிச்சயம் பதிவு செய்து கொள்ளும். ஏனெனில் ஈழத்தின் கலைத்துறையினர் அனைவரும் அறிந்து, தெரிந்து கொள்ளவேண்டிய வில்லிசையின் பல்கலைக் கழகம் அவர்.

இவர் இறந்து விட்டார் என்று என் மனது இன்னமும் நம்பவில்லை. எங்கோ சென்று விட்டார், விரைவில் வந்து விடுவார், அதுவரை பொறுத்திருப்போம் என்று தான் அடி மனது சொல்கிறது. மந்திர ஓசைகளும் கோயில் மணியோசைகளும் நாதஸ்வர, தவில் முழக்கங்களும் அடியார்களின் ஆரவாரங்களும் ஒலிபெருக்கிகளின் வழி வரும் பக்திப் பாடல்களும் எனத் தமிழர்களின் ஆலயத் திருவிழாப் பண்பாட்டு முறைமைகள் அனைத்தும் "வில்லிசைக்குரிய நேரம் வந்து விட்டது, வில்லிலே நாணை ஏற்றுவோம், கருவிகளை எடுத்துத் தாயார் நிலையில் வைத்திருப்போம், ஆர்மோனியத்தை எடுப்போம், வரிசையாக மேடைக்குச் செல்வோம் " என்று நினைவூட்டுகின்றன.

இந்த நினைவுகள் என் உயிர் உள்ளவரை என்மனதில் நிறைந்திருக்கும். இந்த நினைவுகள் தான் என்னை எதிர்காலத்தில் நகர்த்திச் செல்லும். ஏனெனில் சின்னமணி என்னும் நாமம் என் குருதியில் கலந்து விட்ட நாதம். அவர் என் இதயத்தில் குடியிருக்கும் தெய்வம். அவர் எனக்குக் கடவுளால் அருளப்பட்ட கிடைத்தற்கரிய, காணற்கரிய கலையம்சமும் பாசமும் தெய்வீகமும் நட்பும் கொண்ட குரு.

என்றும் அழியாது அவர் புகழ் இவ்வுலகில்

**தவநாதன் றொபேட்,**

**முதுநிலை விரிவுரையாளர்,**


**இசைத்துறை,**

**யாழ். பல்கலைக் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லிசையின் மணி மகுடம்வீழ்ந்தது



வில்லிசையின் மணிமகுடம் வீழ்ந்தது இன்று. மாதனையில் மலர்ந்த மலர் வில்லிசையின் மூலம் உலகெங்கும் மணம் வீசியது. பாரம்பரிய வில்லிசைக்கு உயிர் கொடுத்து நவீனத்துவப்பாணியில் நகைச்சவையுடன் இதிகாச புராணக்கதைகளை பாமர மக்களுக்கும் செவிப்புலனாக்கிய பெருமை வில்லிசைப்புலவர் கலாவினோதன் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களையே சாரும். இயல், இசை நாடகப் பாணியில் வில் எடுத்துப் பாடும் ஆற்றல் இவருக்கே உரிய தனித்துவமாகும்.

நகைச்சுவைப் பாணியுடன் கணீர் என்ற குரலில் கண்கள் நளினம் பேச வில்லிசைக்கும் ஆற்றல் கண்டு வியந்துள்ளேன். அத்தருணம் முதல் அவரது வில்லிசைக்கும் கலைக்கும் நான் மீளாரசிகன் ஆனேன். மைத்துணன் என்ற உறவு முறை மூலம் வில்லிசை வேந்தனுடன் ஒரு துளி நிகழ்வுகள் செய்யும் வாய்ப்பு எனக்கு கிடைக்கப் பெற்றது. என்னிடம் உள்ள கலை உணர்வினை இனங்கண்டு தனது வில்லிசைக் குழுவிலே இணைத்து யாழ்பாணத்தின் காரை நகரில் ஆரம்பித்து மலேசியா, சிங்கப்பூர், சுவிற்சலாந்து வரையான உலக நாடுகள் வரை அழைத்து சென்று எனது கலை திறனை வளர்த்தார். மலேசியாவில் அவருடன் இணைந்து செய்த வில்லிசை நிகழ்வுகளின் நினைவுகள் என்றும் மறக்க இயலாதவை. அத்துடன் வில்லிசை என்றாலே சின்னமணி தான் என்று உலக தமிழர்கள் எல்லோரும் பாராட்டும் வண்ணம் வில்லிசையினை மக்கள் அறியும் கலையாக தனக்குரிய பாணியுடன் வளர்த்த பெருமையும் பாராட்டும் இவருக்கே உரியது.

வில்லிசையில் மூன்று காலகட்டமாக தனது பாணியையும் வடிவத்தினையும் மாற்றி சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என்ற அனைத்து மக்களின் மனத்தினையும் கவர்ந்த வில்லிசைப் புலவருடன் ஒரு சீடனாகவும் அவரது மூத்த வில்லிசை குழுவுடனும் பணியாற்றியவன் நான் எனும் போது அது எனக்கு பெருமை சேர்க்கின்றது. இவரது சீடனாக இருந்த காலங்கள் எனது மனதில் நீங்காத நினைவுகளாக மனதில் பதிந்துள்ளன. சுவிஸ்லாந்தில் நகைச்சுவை நாடகம் ஒன்றில் நான் பங்கேற்று அவரது பாணியில் அவர் முன்னிலையில் நடித்த போது என் நடிப்பு கண்டு குகன் நானே உன் நடிப்தகண்டு வியந்துள்ளேன் என்று இலங்கையின் நடிகர் நாயகம் கூறியமையே எனது வாழ்வின் அரும் பெரும் வார்த்தைகள் ஆகும்.

அன்னாரின் மறைவு எனது கலை வாழ்வுக்கும் குடும்பத்தினருக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியுற்று இறைவனடி சேர எல்லாம் வல்ல உலவிற்குளம் சித்தி விநாயகரை பிராத்திக்கின்றேன்.

**விஸ்வலிங்கம் கேதீஸ்வரன்,**

**ஜேர்மனி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லிசை வேந்தன்

உலகப் புகழ் பெற்ற ஈழத்துப் பெருங்கலைஞன் வில்லிசைக்குப் புது வடிவம் கொடுத்து தன்னிகரில்லாத் தனித்துவம் மிக்க கலைஞனாக விளங்கிய வில்லிசை வேந்தன் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி) அமரத்துவம் எய்திவிட்டமை எமக்கெல்லாம் பேரிழப்பாகும். தனக்கெனத் தனியிடம் கொண்டு கலையுலகில் தன்னை உலகறிய வைத்த பெரும் கலைஞன். எமது நாட்டில் மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகள், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற தமிழர் வாழும் நாடுகள் எங்கும் தன் கலைவளத்தால் தன் புகழை நிலைநிறுத்தியவர்.

வில்லிசை மட்டுமல்ல நடிப்பாற்றலிலும் தனிப் புகழ் பெற்றவர்.அவர் நடித்த இயமன் கதா பாத்திரத்தைப் பற்றிப புகழாதவர் இல்லை. வேடப் பொருத்தமும் பாடல்களின் துடிப்பும் பாத்திரத்தை உணர்ந்து யதார்த்தமாக நடிக்கும் நடிப்பும் இவருக்கென வாய்த்த வொன்று சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் இக் கதாபாத்திரத்தை இவர் நடித்த ஒரு சந்தர்ப்பத்தில் இவரது தோற்றத்தையும் நடிப்பினையும் பார்த்த ஒரு முதிய இரசிகர் நாடகம் நடந்த இடத்திலேயே உயிரை இழந்தமை இவரது நடிப்பிற்குக் கிடைத்த பெரும் அங்கீகாரம்.

இது மட்டுமல்ல காத்தவராயன் நாட்டுக்கூத்தில் இவர் நடித்த கதாபாத்திரங்களும் அரிச்சந்திரா இசைநாடகத்தில் நட்சத்திரத் தரகராக பறைமேளக் கலைஞனாக நடித்த பாத்திரங்கள் இன்றும் மக்கள் மனதில் நிலைபெற்று மக்கள்மனதில் நிலைபெற்று அழியா இடம் பெற்றவை.

உடுக்கு வாத்தியத்தை இசைப்பதிலும் சித்திரம் வரைவதிலும் ஆற்றல் மிக்கவர். இவ்வாறு பல்துறை ஆற்றலம் புகழும் பெற்ற இக்கலைஞர் எனது மிக நெருங்கிய உறவினர் என்பதில் பெருமை கொள்கின்றேன். ஆனால் இக் கலைவேந்தன் காலன் கைப்பட்டமை ஆற்றொணாத் துயரை நமக்குத் தந்துள்ளது. இத்துயர் அடங்கும் துயர் அல்ல. எமது குடும்பத்தின் பாசப் பிணைப்பில் கலந்து நின்ற எமது உயிர் உறவினரது இறையடியில் சங்கமமாகி ஈடில்லாப் பெரும் பேறு பெற வேண்டும் என எம்பெருமானின் பாதங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**பிரிவால் துயருறும்**
**சைவப்புலவர் குணபாலசிங்கம்**
**செல்வ பவனம்**
**வல்லை வீதி, சங்கானை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள்மனம் கவர்ந்த வில்லிசை சக்கரவர்த்தி

இலங்கையின் யாழ்பாணத்தின் வடமராட்சியில் நாடகக்கலை, நாட்டியக்கலை, சங்கீதக்கலை போன்ற சகல கலைகளும் தோற்றம் பெற்றது மாதனையாம் பதி. அப் புண்ணிய விடயத்தை அறியாதோர் யாரும் இலர். அத்துணை சிறப்பு பெற்ற மண்ணிலே திரு திருமதி நாகலிங்கம் இராசம்மா தம்பதியினர் பெற்றெடுத்த தவப்புதல்வன் தான் எமது வில்லிசை சக்கரவர்த்தி. பார் புகழும் பாவலன் அருந்தவப் புதல்வனைப் பெற்றெடுத்த பெற்றோர் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தம் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் தந்தையர். குழந்தைப் பருவமதில் பாலகனாக எட்டாவது வயதில் காத்தவராயன் மேடை நாடகமதில் பாலகாத்தானாக நடித்தார்.

பண்டைக்காலத்தில் சோழன் ஆண்ட இடம் தான் பழம் பெரும் தெய்வ ஸ்தலங்கள் சுமந்த சுழிபுரம் பதி. பறாளாய் விநாயகர் போன்ற தெய்வங்கள் அங்கே கோயில் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அற்புதமான ஆலயங்களிலும் இவருக்கு வில்லுப்பாட்டு நடாத்தும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆறுமுகப் பெருமானின் சங்காபிஷேகத்தினம் அன்று நவரசங்கள் பொருந்திய இவரது வில்லிசையை மக்கள் கூட்டம் மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்தனர். அச்சமயம் எல்லோரும் அதிசயிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. முருகப்பெருமானின் பக்தியும் விசுவாசமுமுள்ள எங்கள் மதிற்பிற்குரிய குருக்கள் திரு சண்முகரத்தினம் அவர்கள் மூலஸ்தானத்திற்கு சென்று கடவுளின் கருவறையிலுள்ள மாலையினை அணிவித்து கௌரவப்படுத்தினார். அன்னார் தன்னலமற்ற ஒரு தியாகி, ஜீவகாருண்ய அபிமானம் நிறைந்த ஒரு பண்பாளன். மைத்துனர் திரு கணேசமூர்த்தி 1996ம் ஆண்டு நோய் வாய்பட்டு இறந்து விட்டார். அவர் இறக்கும் தருவாயில் அவருக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றிய கண்ணியவான் நான்கு பிள்ளைகளையும் கண்ணும் கருத்துமாக வளர்த்து ஒரு குறையுமில்லாமல் கல்வியிலே ஊக்கம் கொடுத்து கற்றுத்தேர்ந்தவராக்கினார்.

அன்னார் கலையிலே பிறந்து கலையிலே வளர்ந்து கலையிலே தன்னை அர்பணித்து தனது மக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு கலையிலே நாமமிட்டு வாழ்ந்த இவர் தைப்பூசத்தின் அடுத்த நாள் பிரதமை திதியில் இறைவன் திருவடி அடைந்தார். அன்னாரின் பூதவுடல் கலை உலகிற்கே அடக்கம் செய்யப்படுகின்றது. ஆன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றேன்.

அன்னாரின் பெரும் ரசிகரான

**திரு, திருமதி முத்தையா மாஸ்டர்.**

**சுழிபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாவிநோதன் க.நா.கணபதிப்பிள்ளை [சின்னமணி] அவர்களை கனடாவில் பாராட்டி எழுதிய கவிதை



ஓவிய அழகும் உண்மை உணர்வினின் ஒளியும் மேலாம்
பாவியல் அறையில் பண்பில் பரவச இசையில் நீங்கள்
காவியத் தலைவன்! என்றும் கலைகளின் சிகரம்!! நோக்கில்
ஆயிரத்தொருவன் ஐயா! ஆயிரம் ஆண்டுவாழ்க!

பணியிலே சிறந்த வீஎஸ்.மகேந்திரன் தன்னால் தங்கள்
மணி விழா நிகழ்வின் போது மாலைகள் மலர்ச் செண்டோடே
அணி திகழ் அரங்கில் அன்பர் ஆயிரம் பேரால் அன்று
பணிவுடன் அளித்த அன்புப் பரிசிலைப் பரிந்து ஏற்றாய்

கிண்கிணிக் குரலோடு ஒன்பது வயது தன்னில்
கண் களித்திடவே கன்னி தமிழிலே இசைத்தானுக்கு
அன்னையர் குழாமும் ஏனை மக்களும் அரவணைத்து
"சின்னமணி" என்னும் நாமம் சூட்டியே உவகை கொண்டார்.

தாயகத்தோடு மற்றும் சிங்கப்பூர் மலாலாயா மேலைத்
தேசமெல்லாம் ஈழப் புகழ்க் கொடி காட்டி என்றும்
நேயமாய் எவரும் போற்ற "வில்லிசைப் புலவர்" என்னும்
தூய நற் புகழினோடு வாழ்க பல்லாண்டு வாழ்க.

இலங்கையின் இந்து தர்மக் கலாச்சாரச் சபையினாலே
துலங்கிடும் "கலாபூஷணம்" விருதுடன், கலைஞருக்குக்
கலங்கரை விளக்காய் நின்றாய் கலைஞனே வாழ்க என்று
புலம்பெயர்ந் திங்கே வந்தோம் வாழ்த்தினோம் பல்லாண்டு வாழ்க!!

அராலியூர்.கா.சிவ சுப்பிரமணியம்
மானிப்பாய் இந்துக் கல்லூரி
இளைப்பாறிய ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாவினோதன் சின்னமணி ஐயா

இசைஞானம், சொல்ஞானம், பொருள்ஞானம், செயல் ஞானம் என்று எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டு ஒரு வில்லெடுத்துப் பல சொல்லெடுத்து வில்லிசைமூலம் பட்டி தொட்டி எங்கும் கலை மணம் பரப்பிய பெருந்தகை கலாவினோதன் சின்னமணி ஐயா அவர்கள்.

ஈழத்தில் மட்டுமல்ல கடல் கடந்த நாடுகளிலும் சமய, இலக்கிய, இதிகாச, புராணக் கதைகளை, மட்டுமல்ல பல பிரச்சனைகளையும் பொதுமக்கள் இரசிக்கும் வகையில் நகைச்சுவையுடன் தனது வில்லிசை மூலம் வெளிப்படுத்தியவர்.

இசைநாடக மேடைகளில் குறிப்பறிந்து செயல்படுவதில் பெரும் வல்லவர். ஒரு முறை சங்கானையில் சத்தியவான் சாவித்திரி நாடகம். கிங்கிரர்களுள் ஒருவராக நான் நடித்தேன். நாடகம் காலதாமதம் ஆவதை உணர்ந்த சின்னமணி ஐயா அவர்கள் " சாவித்திரி ! நேரம் நெருங்குகின்றது, நான் புறப்பட வேண்டும், மிக விரைவாக ஒரு வரத்தைக் கேள்" என்று நகைச்சுவையாக எடுத்துரைத்தார். இது போன்றே சம்பூர்ண அரிச்சந்திரா நாடகத்திலும் நட்சத்திர தரகராக வரும் சின்னமணி ஐயாவுடன் காலகண்ட ஐயராக நடித்த எனது அனுபவங்களும் மறக்கமுடியாதவை.

இவ்வாறு அவருடனான நாடக அனுபவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். எமது பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செய்பாடுகளில் பக்கபலமாக நின்று உதவிய சின்னமணி ஐயா அவர்கள் எம்மோடு கொழும்புப் பயணத்திலும் பங்கு கொண்டவர். அந்தப் பயணமும் மறக்க முடியாதது.

அமரத்துவம் அடைந்த சின்னமணி ஐயாவை மெற்றாஸ்மயில் அவர்களும் செல்வரட்ணம் அண்ணர், ஜேன்கபாஸ் அண்ணர் ஆகியோரும் அமரருள் ஆசனம் கொடுத்து வரவேற்பர்.ஏனெனில் மூத்தகலைஞனே வருக வருக என்று..

வ.தயாநிதி
செயலாளர்,
பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ந்ததோ வில்லிசை!

சொல்லில் சொல்லற்கரிய வில்லிசைச் சிகரம், இன்றுதேடிக் காணாச் செல்லிடம் சேர்ந்தார்.எனும் போது கலையுலகம் முழுமையுமே மௌனித்து விடுகின்றது.

பேசற்கரிய பேசு பொருளாய் கிடைத்தற்கரிய முத்தாய், காணற்கரிய கலைஞர்களின் தலைவனாய், குருவாய் விளங்கி, மண்ணுலகை விட்டு மறைந்த பின்னும் தன் மகிமையால் மண்ணில் அழியாப்புகழ் பெற்ற அற்புதக் கலைஞர்தான் இன்றைய நினைவிற்குரிய கலாவினோதன், வில்லிசைப் புலவர் அமரர் க.நா.கணபதிப்பிள்ளை அவர்கள்

ஈழத்துக் கலை இலக்கிய வரலாற்றில் ஒருமைல் கல் சின்னமணி அவர்கள் ரசிகர்களின் தீராக் கலைப்பசிக்கு தீனி போட்ட தெய்வம் எங்கள் சின்னமணி அவர்கள்.

வில்லிசை, இசை நாடகம், காத்தவராயன் சிந்து நடைக் கூத்தென்று நீங்கள் தடம் பதித்த களங்களின் காவுகைகள் எங்கள் நெஞ்சை நிறைக்கின்றன.

வில்லிசையின் இலக்கணங்கள் உங்களிற்குள் அடக்கம் என்பதற்கு மேல் உங்களின் வில்லிசைப் பாணி வில்லிசைக்கே வரைவிலக்கணம் எனலாம்.

உங்களுக்குள் இருந்த இசை நுணுக்கமும், கலைத்துவமும், கதை சொல்லும் பாங்கும், அரங்க ஆளுமையும், அபிநய அசைவும், ஆற்றலின் துடிப்பும், பயிற்சியும் முயற்சியும் நீங்களாக உங்களுக்கென்று தேடியவை என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

எத்தனை கதைகள் வில்லில் இசைத்தீர்கள். அப்பாடா...! அத்தனைக்குள்ளும் நீர் காட்டிய புதுமைகள் அதி அற்புதம்.....! இத்தனையும் பெற நீர் செய்த தியாகத்தை நினைத்தால் அது வானை முட்டும்.

நாடகப் பாணியில் நீர் பாடும் பாடல்கள் எங்களிற்குப் பெருவிருந்தளித்தன. செந்தமிழும், நல்லிசையும் நகைச்சுவையும் சொற்சுவையும் உங்கள் நாவில் நர்த்தனமாடின. ஒவ்வொரு கதையையும் ரசித்துச் சொல்லும் அழகு எங்களைக் கவர்ந்தது.

திரு நீல கண்டர் சரிதம் சொல்லும் போது வெறும் வாயையே முழு வெற்றிலை போட்ட வாய் போல் பாவனை பண்ணி சப்பிக் குதப்பி, கடைவாயால் வழியும் எச்சிலைத் துடைத்து, யன்னல்க் கதவை மெல்லத் திறந்து துப்பும் காட்சி இந்தியக் கலை ஜாம்பவான்களையே விஞ்சியதை நினைக்கும் போது பெருமை கொள்வது நீங்கள் மட்டுமல்ல கூடவே எங்கள் ஈழத்துக் கலையுலகும் தான்.

உங்களின் குரலின் ஏற்றத்தாழ்வும், கர்ச்சிப்பும் உங்களுக்கு நிகர் நீங்களே என்பதை கட்டியம் கூறி நின்றது. நடுச்சாமக் காட்சியைச் சொல்ல விளைகின்ற போது சத்தத்தை மெல்லக் குறைத்து, குரலைத் தளர்த்தி, “ நடுஜாமம் 12 மணி...... ஊரே அடங்கிக் கிடக்கின்ற நேரம்.... எங்கும் இருள் சூழ்ந்த வேளை......” இப்படியே படிப்படியாகச் சொல்லிச் சொல்லிச் சத்தம் குறையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் நிசப்தம் மட்டும் பேசும்...... திடீரென்று உரத்த குரலில் "பேய்களும்.... பிசாசுகளும்...." எனத் தொடங்கும் போது அரங்கமே அதிரும். இது உங்கள் ஆளுமையின் ஆழ்த்தடம்.

மாதனையூர் இசைத்திலகம் மகாலிங்கம் வழியில் இசை நாடகத்தில் உங்களின் ஆற்றுகைகள் கண்டு வியந்தோம்.

யமன், அரிச்சந்திரன், நாரதர், தரகர், சத்திய கீர்த்தி, குட்டி அண்ணா முதலாய அத்தனையும் உங்களின் புகழை உச்சத்தில் பரப்பின.

"சின்னமணி" பாணியிலான காத்தான் என்று ஒரு பாணியையே உருவாக்கியிருக்கிறீர்கள். என்றால் இதற்கும் மேலும் எழுத இடம் உண்டோ?

பார்வதி அம்மையோடு நீங்கள் பாடிய

"என்றுமில்லா மகனே பூசையடா....." எனத் தொடங்கும் காத்தான் - அம்மன் சம்பாஷணைப் பாடலும், கலாபூஷணம் குணபாலசிங்கம் அண்ணருடன் நீங்கள் பாடிய "கல்யாணம் இல்லையென்று......." எனத் தொடங்கும் சிவன் - கிருஷ்ணர் சாபப் பாடலும் இன்றும் இனிக்கின்றன தேனாய்.

உங்கள் கலையுலக வாழ்வின் பயணங்கள் முழுமையும், கலகலப்பாகவே நிறைவேறியமை யார்க்கும் கிடைக்காத பேறு எந்த நேரமும் ஒவ்வொரு கதைபேசி சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த எங்களின் கலைவாணர் நீங்கள்!

நீங்கள் மறையவில்லை. விதைத்தவைகள் வினையத் தொடங்கிவிட்டன. இசைத் தட்டுக்கள் உங்கள் குரல்கட்டுக்களைத் தெளிக்கும்........ தெளிக்கும் இசைச் சொட்டில் உங்களின் ஆசிகள் பிரதிபலிக்கும்..........

வரலாறாய் வாழ்ந்த வரப்பிரசாதமே! உங்கள் வரலாறு கலைவரலாற்றில் வரலாறாகும். உங்களின் ஆத்மா ஆடல் வல்லான் அரங்கக் கூத்தனின் பாத நிழலில் சாந்தி பெறத்துதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கலாபூஷணம் மாவிட்டபுரம் வே.சிதம்பரநாதன்**
**(பொன்னார்)**
**நீர்வேலி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரங்கேற்ற நிகழ்வின் போது



திருவிழாவில் வில்லிசை நிகழ்வில்



திருவிழாவில் வில்லிசை நிகழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கனடாவில் தமிழ் இசைக் கலாமன்றத்தின் வில்லிசை நிகழ்வில்
அமரர் வில்லிசைப்புலவர் கலாவினோதன்
நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி)



சுவிஸ்லாந்தில் பாராட்டுப் பெற்ற பின் அவர் தம் குழுவினருடன்
அமரர் வில்லிசைப்புலவர் கலாவினோதன்
நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரம் படைத்த வேடங்கள் சில



இயமன்



கிருஷ்ணர்




காத்தவராயன்



தோட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலைஞன் சின்னமணி அவர்களின் மணிவிழா மலர் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலைஞன் சின்னமணி அவர்கள் பெற்ற விருதுகளுள் சில




கனடா வாழ் விஸ்வப் பிரம்ம மக்களின் கௌரவ மடல்




"ஜனரஞ்சக நாயகன்" என்னும் பட்டம் பெற்றபோது வழங்கப்பட்ட மடல்




"வில்லிசைத் திலகம்" என்னும் பட்டம் பெற்றபோது வழங்கப்பட்ட மடல்



"கலாபூஷணம்" விருதின் போது வழங்கப்பட்ட கௌரவ மெடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலைஞன் சின்னமணி அவர்கள் பெற்ற விருதுகளுள் சில



ஈழநல் நாட்டின் கலைத் தூதராகக் கனடா வந்து
மண்வாசனையை எம்மக்களிடம் பரப்பிச் செல்லும்
களம்பல கண்ட கலைஞர், வில்லிசை வேந்தன்

**கலைமாமணி**

**நா. கணபதிப்பிள்ளை**

அவர்களுக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர்
ஈழத்தமிழ் மக்களால் வழங்கப்பெற்ற

**'கலாவிநோதன்'**

கௌரவ பட்டத்தை மீண்டும் உறுதிப்படுத்தி
கனடிய கலை இலக்கிய ஊடக நண்பர்களால்
இந்தப் பட்டயம் வழங்கப்பெற்றது.

2002 ஜுலை 19ம் திகதி வெள்ளிக்கிழமை
கனடாவின் ரொறன்ரோ பெருநகரில் அமைந்துள்ள
அட்லாண்டா விருந்துபசார மண்டபத்தில்

**திரு எஸ். திருச்செல்வம்**

(சந்தியப் பிரமாண ஆணையாளர் &
பிரதம ஆசிரியர் - "தமிழர் தகவல்" கனடா)
அவர்களின் தலைமையில் இந்தப் பாராட்டுபசார விழா நடைபெற்றது.

*Sponsor : Mr. R. Rishikeshan of 'Nallur Kumaran'*

"கலாவினோதன்" என்னும் பட்டத்தினை மீண்டும் உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட கௌரவ மடல்



வில்லிசை வேந்தன் கலா பூஷணம்
"சின்னமணி" அவர்களுக்கு
செஞ்சோலை வில்லிசைக் குழு வழங்கும்
பாராட்டுப் பட்டயம்

நன்றி! நன்றி!! நன்றி!!!

மயூரன் சிறீஸ்கந்தராஜா
சுஜப்பிரகாஸ் சற்குணராஜா
பிரவீன் சண்முகநாதன்
பிரசாந் சண்முகநாதன்
நிவேதன் வேலாயுதபிள்ளை
ஆரணி முருகானந்தம்
ஆரபி யோகேஸ்வரன்
ராகவி யோகேஸ்வரன்
பெனிற்றா றெஜினோல்ட்

செஞ்சோலை சிறார் வட்டம்
கனடா - 22-06-200


செஞ்சோலை வில்லிசைக் குழு வழங்கும் பாராட்டுப் பட்டயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மக்கள் கலைஞன் சின்னமணி அவர்கள் பெற்ற விருதுகளுள் சில





கலைப் பேரரசு நினைவு விருதின் போது
வழங்கப்பட்ட வாழ்த்து மடல்




கனடாவில் தமிழர் தகவல் மையத்தினரால்
வழங்கப்பட்ட கௌரவ வாழ்த்து மடல்




கனடாவில் தமிழர் தகவல் மையத்தினரால்
வழங்கப்பட்ட கௌரவ வாழ்த்து மடல்





கொழும்பு கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழாவில்
ஆசிரியர் க.சுப்பிரமணியம் நினைவு விருதின் போது
வழங்கப்பட்ட கௌரவ வாழ்த்து மடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலைஞன் சின்னமணி அவர்கள் பெற்ற விருதுகளுள் சில




சிவத்தமிழ் விருதின் போது
வழங்கப்பட்ட வாழ்த்து மடல்




ஆளுநர் விருதின் போது
வழங்கப்பட்ட வாழ்த்து மடல்




"சிவகலாபூஷணம்" விருதின் போது
வழங்கப்பட்ட வாழ்த்து மடல்




"மரபுக்கலை அரசு" விருதின் போது
வழங்கப்பட்ட வாழ்த்து மடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கலைஞன் சின்னமணி அவர்கள் பெற்ற விருதுகளுள் சில




திருநெல்வேலி பத்திரகாளி கோவிலில் வழங்கப்பட்ட
வாழ்த்து மடல்



வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தால்
கலைக்குரிசில் பட்டம் வழங்கப்பட்டது.



அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றத்தாரால்
"அச்சூர்க்குரிசில்" பட்டம் வழங்கப்பட்டது.



வடமராட்சி கல்வி வலயம் நிறைமதி விழாவின் போது
"கலைவாரிதி" பட்டம் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லிசைப் புலவர் சின்னமணி காலமானார்



1.

# வில்லிசை மாமேதை சின்னமணி காலமானார்



2

# ஈழத்தின் வில்லிசைச் சக்கரவர்த்தி சின்னமணி காலமானார்



3

# வில்லிசை வேந்தன் சின்னமணி காலமானார்



4

இவரது மறைவு குறித்து வெளியான செய்திகள்

1. உதயன்
2. வலம்புரி
3. தினமுரசு
4. தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லிசை மாமேதை கலாவினோதன் சின்னமணி

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

9



தமிழர்களின் நாட்டார் வழக்கியற் கூறுகளுள் ஒன்றாக இனம் காணப்படும் வில்லிசை என்னும் நிகழ்வை ஈழத்தில் ஏராளமானவர்கள் நிகழ்த்தி வந்துள்ளனர். எனினும் கணபதிப்பிள்ளை சின்னமணி என்னும் அற்புதக் கலைஞனாலேயே இந்தக் கலை மெருகூட்டப்பட்டு அழகுப் பொலிவுடன் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வளர்க்கப்பட்டு வருகின்றது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் சங்கமிக்கும் இந்தக் கலையை பல்துறை சார்ந்த அறிவுள்ள இந்தக் கலைஞர் தனது முழுநேரத் தொழிலாகக் கொண்டு இன்று வரை வளர்த்து வருகின்றார்.

காலம் சென்றவர்களான நாகலிங்கம் - இரசம்மா தம்பதியரின் மகனாக 30.03.1936 இல் வடமராட்சியில் அமைந்திருக்கும் மாதனை என்னும் கலை வளம் நிறைந்த சிற்றூரில் பிறந்தார். தனது எட்டாவது வயதில் குழந்தைக் கூத்தாளாக நடித்துப் புகழ்பெற்ற இவர் நாடகத் துறையிலும் கல்வியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக வளர்ந்து வந்தார். தமிழ் மொழியில் பெரும் புலமை கொண்டிருந்த தனது பெற்றோரிடம் தாய் மொழியையும் புராண இதிகாச வரலாறுகளையும் குருகுலத்தில் கற்பதைப்போன்று கற்றதுடன் தனது மாமனாரான கீதாஞ்சலி வி.கே.நல்லையாவிடம் நாடகத்தையும் இசையையும் கற்றுக் கொண்டார். பாடசாலைப் படிப்பைச் செவ்வனே முடித்துக் கொண்ட பின் 1957இல் ஆசிரிய நியமனம் பெற்று இரத்மலானை கொத்தலாவலபுரம் தமிழ்ப் பாடசாலையில் தமிழ், ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார்.

இந்தக் காலத்தில் தமிழகத்தின் புகழ்பூத்த நாடக மேதைகளான ரி.கே.எஸ். சகோதரர்களுடன் இணைந்து நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்ற நாடகங்களில் பங்குகொண்டார். அத்துடன் இலங்கை வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் பணியாற்றி வந்தார் அத்துடன் அந்தக் காலத்தில் கொழும்பில் தங்கியிருந்து நாடகங்களை மேடையேற்றிவந்த திரைப்பட நடிகரும் வில்லிசையாளருமான கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணருடன் தங்கியிருந்து நாடக உத்திகளையும் வில்லிசையின் நுட்பங்களையும் கற்றுக்கொண்டார்.

வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தின் உருவாக்க உறுப்பினர்களுள் ஒருவரான இவர் இந்த மன்றத்தால் பல தடவைகள் மேடையேற்றப்பட்ட திப்புசுல்தான், வீரமைந்தன், இன்பக் கனவு போன்ற நாடகங்களில் முக்கிய நடிகராகச் சிறப்புற நடித்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு நாடகத்துறையில் துறைதோய்ந்த நடிகனாக விளங்கிய இவர் அக்காலத்தில் வில்லிசை நிகழ்வுகளை வழங்கிவந்த திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களின் நிகழ்வில் நகைச்சுவையாளனாகவும் பக்கப்பாட்டுக்காரனாகவும் உடுக்கிசைக் கலைஞனாகவும் வில்லிசை அரங்கைப் பல ஆண்டுகளாகச் சிறப்பித்து வந்தார்.

நடிப்பு, இசை, நடனம், தமிழ், சமயம் போன்ற அனைத்திலும் ஒப்பற்ற திறன் கொண்டவராக விளங்கிய இவர் ஹார்மோனியக் கலைஞர் நல்லூர் சோமசுந்தரம், எஸ்.ரி.அரசு ஆகியோரின் துணையுடனும் குருவாக விளங்கிய திருப்பூங்குடி ஆறுமுகத்தின் ஆசீர்வாதத்துடனும் தனித்துவமான வில்லிசைக் கலைஞனாக 02.02.1968 அன்று மாலை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய முன்றலில் பெருந்திரளான கலைஞர்கள், பொதுமக்கள், ஆர்வலர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் கண்டார்.

பல்துறைத் திறன் கொண்ட இவர் வில்லிசை நிகழ்வின் நாயகனாக அமர்ந்து கதையைச் சொல்லும் முறையும் நவரச பாவங்களை முகத்தில் காட்டும் அழகும் பாத்திரமாக மாறி நடிக்கும் திறனும் தமிழை அழகுற உச்சரிக்கும் பாங்கும் பொருளுணர்ந்து பாடல்களை சுருதி லயம் பிசகாமல் பாடும் இனிமையும் சிந்தனையைத் தூண்டும் நகைச் சுவையும் இவரது தனித்துவப் பண்புகளாக வில்லிசை நிகழ்வுகளில் பொங்கிப் பிரவகித்த போது மக்கள் தம்மை மறந்து இரசித்தனர்.

மரபு வழியான கலைநிகழ்வுகளே முழுமையாக ஆலயத் திருவிழாக்களில் இடம்பெற்று வந்த அந்தக் காலத்தில் இவரால் தொடங்கப்பட்ட வில்லிசை பெரும் வரவேற்பைப் பெற்றது. இக்கலைக்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இவர் தமிழர்களால் விரும்பப்படும் கதைகள் அனைத்தையும் வில்லிசை வடிவில உருவாக்கிச் சிறப்புற நிகழ்த்தி வந்தார். இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், ஐம்பெரும் காப்பியங்கள் போன்றவற்றையும் தமிழ் இலக்கியப் பரப்பில் சிதறிக் கிடக்கின்ற நூறுக்கும் மேற்பட்ட வரலாறுகளையும் வில்லிசையாக்கி இன்றுவரை தொடர் நிகழ்வுகளாக நிகழ்த்தி வருகின்றார். இவ்வாறான வரலாறுகளை வில்லிசையாக நிகழ்த்தும்போது கதையில் வருகின்ற அத்தனை பாத்திரங்களாகவும் மாறிவிடும் இயல்புடையவராக இவர் இருப்பதனால் படித்தவர் முதல் பாமரர் வரையான அனைவரும் இவரது வில்லிசையை மெய் மறந்து இரசித்து வருகின்றனர். ஏராளமான கதைகளை வில்லிசையில் நிகழ்த்தியிருக்கும் இவர் ஈழத்தின் பகுதிகளில் மட்டுமல்லாமல் அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், கனடா, சுவிஸ் போன்ற புலம்பெயர் நாடுகளுக்கும் அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு வில்லிசைத்துறையில் முழுமையாக ஈடுபட்டு வருகின்ற கலைஞராக இருக்கின்ற போதும் இசைநாடகத் துறையிலும் தன்னிகரற்ற கலைஞராக விளங்கி வருகின்றார். இசைநுட்பம் நிறைந்த பாடல்களையும் பல வரலாறுகளை எடுத்துரைக்கின்ற நீண்ட வசனங்களையும் கொண்டமைந்த பாத்திரமான இயமனாக நடிப்பதில் தனித்துவமான பாணியை ஏற்படுத்திப் பல இளம் நடிகர்களிற்கு எடுத்துக்காட்டாக இருந்து வரும் இவர் சுருதி சுத்தமாகக் காத்தவராயன் கூத்தைப் பாடி நடிக்கும் திறன் கொண்ட சிலருள் முதன்மையானவர்.

கேட்பவர்களால் என்றைக்கும் மறக்கமுடியாதவாறு ஒரு கதையை கலைநயத்துடன் கூறும் ஆற்றுகை வடிவமே வில்லிசை ஆகும். இதில் நடுவில் அமர்ந்திருப்பவர் கதை சொல்பவர், சுற்றியிருப்போர் கதையைப் புதிதாகக் கேட்போர். ஆகவே கதையைக்

[illegible]

கேட்பவரில் ஒருவர் நகைச் சுவையாகவோ கோமாளியாகவோ பாவனை செய்து கொள்ளலாம். ஆனால் தற்காலத்தில் தமிழ்த் தினப் போட்டிகளில் மாணவர்களுக்கு வில்லிசையை நெறிப்படுத்தும் ஆசிரியர்கள் நிகழ்வில் பங்குபற்றும் அனைவரையும் கோமாளிகள் போன்று ஆடவைத்து, பேசவைத்து, நடிக்கவைத்து பிழையானதோர் முறையை இத்துறையில் ஏற்படுத்தி விடுகின்றனர். எடுத்துக் கொள்ளும் கதையின் தன்மை கெடாமல் கிராமிய மணம் கமழ இக்கலையை வளர்த்தெடுக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று தனது உள்ளக் கிடக்கைகளை இவர் கூறுகின்றார். ■

(நன்றி : உதயன் பத்திரிகை 11.09.2011)

# சின்னமணியின் பூதவுடல் தீயுடன் சங்கமம்

வில்லிசைக் கலைஞர் கலாவினோதன் சின்னமணி நா.கணபதிப்பிள்ளையின் பூதவுடல் பிற்பகல் நேற்று (08.02.2015) பிற்பகல் 3 மணியளவில் அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

முன்னதாக அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன. கிரியைகளைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் அஞ்சலியுரைகள் இடம்பெற்றன.

வடமாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், கோப்பாய் பிரதேச செயலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.பிரதீபன், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் த.றொபேட், கலாபூஷணம் சிதம்பரநாதன், மாதனை மகாளி கலாமன்ற தலைவர் கலாபூஷணம் கார்த்திகேசு, தும்பளை பண்டிதர் ஆ.வடிவேலு, கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன், இசைநாடகக் கலைஞர் தைரியநாதன், அரியாலையூர் கனகரட்ணம், புலவர் தட்சணாமூர்த்தி, வில்லிசைக் கலைஞர்களான சத்தியதாசன், மதியழகன், அ.விஜயநாதன், வடமாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தன் ஆகியோர் இரங்கலுரைகளை ஆற்றினர்

பலநூற்றுக்கணக்கானோர் திரண்டு நின்று கண்ணீர்மல்க விடை கொடுக்க சின்னமணியின் புகழுடல் முழக்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது. ஈழத்தில் நாட்டாரியல் துறை சார்ந்த நூற்றுக்கணக்கான கலைஞர்கள் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(நன்றி : தினமுரசு : 09.02.2015 பக்கம் 02)

## சிரிக்க வைத்த வில்லிசை மாமேதைக்கு அழுகண்ணீரால் அஞ்சலித்தோம்

சின்னமணி என்று அனைவராலும் அறியப்பட்ட வில்லிசை மாமன்னன் நா.கணபதிப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி தமிழ் உலகத் திற்குப் பேரிழப்பைத் தருவதாகும்.

வில்லிசைக் கலையை தமிழ் உறவுகள் வாழும் நாடெங்கும் பரப்பிய பெருமை சின்னமணியையே சாரும். ஓர் ஒப்பற்ற கலைஞன். மக்களின்மனம் அறிந்து வில்லிசைக் கலையை மக்கள் மயப்படுத் திய மாமேதை. இன்று நம்மோடு இல்லை என்ற துய ரத்தோடு நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்த வேளையில், முப்பது வருடங்களுக்கு முற்பட்ட நினைவுகள் இவை. கோயில் திருவிழாவுக்கு அடியார்களை வர வழைப்பதற்காக கலைநிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத் துவதில் திருவிழா உபயகாரர்கள் கடும் போட்டியிடுவர். தவில் நாதஸ்வரக் கச்சேரிகள், புகழ்பெற்ற நாடகங்கள், வில்லிசை இப்படியாக அந்தக் கலை நிகழ்வு கள் அமைந்திருக்கும்.

ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனம் ஊர் எல் லாம்ஓடிச் செல்லும். அடியார்களே! என்ற விளிப்போடு இரவுத் திருவிழாவில் நடைபெறும் கலை நிகழ்சிகள் அறிவிக்கப்படும்.

அந்தக் கலை நிகழ்வில் கலாவிநோதன் சின்ன மணியின் வில்லிசை என்ற அறிவிப்பு உற்சாகத்து டன் வெளிப்படுத்தப்படும்.

ஊர் கூடி இரவுத்திருவிழாவுக்கு செல்வதென்று முடிவு செய்யும். கோயிலின் முகப்பு அரங்கில் சிரித்த முகத்துடன் சின்னமணி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...பாடறியோம்... படிப்பறியோம்... ஏடறியோம்...
எழுத்தறியோம்... கணீர் என்ற குரலிசையில் வில்லிசை ஆரம்பமாகும்.

அங்க அசைவு சோகத்திற்கு அழுகை மகிழ்ச்சிக்குச் சிரிப்பு... எந்தக் கதையைக் கூறவந்தாரோ அந்தக் கதையின் பாத்திரமாக அவர் தன்னை மாற் றிக் கொள்வார்.
சின்னமணியின் வில்லிசையை பின்பற்றி மாணவர்கள் பள்ளிகள் தோறும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை அரங்கேற்றுவர். கிராமத்துச் சிறுவர்கள் தங்கள் பொழுதுபோக்கு நிகழ்வாக வில்லிசைப்பார்கள்.

இப்படியாக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரிலும் வில்லிசை என்ற கலையை ஊட்டி விட்ட பெருமை கலாபூசணம் கணபதிப்பிள்ளை அவர்களையே சாரும்.

சின்னமணி போன்ற ஒரு வில்லிசைக் கலைஞன் இந்த உலகில் எங்கும் இல்லை என்ற பெருமை எங்கள் மண்ணுக்கு உண்டு.
எல்லாக் கலைகளிலும் தமிழகம் தனக்கு ஒப் பாரும் மிக்காரும் இல்லாத கலைஞர்களை தன்ன கத்தே கொண்டுள்ளது. ஆனால் வில்லிசையில் மட்டும் ஈழம் தன்னிகரில்லா கலைஞரை வைத்திருந் தது என்று கூறும் போது, சின்னமணி என்ற நாமத் தின் உச்சரிப்பு எங்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளும்.


அந்த புகழ்பூத்த வில்லிசை மாமேதை இன்று மீளாத்துயிலில். சின்னமணியின் வில்லிசையில் விழுந்து உழன்று சிரித்தின்புற்ற உள்ளங்கள் அவரின் இழப்பால் நிச்சயம் கண்ணீர் சிந்தும்.

சின்னமணியின் மறைவு, ஈழத்தமிழர்கள் சிரிப் பதற்கான சந்தர்ப்பங்களை இறைவன் மட்டுப்படுத் தியுள்ளான் என்ற நினைப்பையே தருகிறது.
தமிழ் உறவுகள் வாழும் நாடெங்கும் சென்று வில்லிசையால் ஈழத்தமிழினத்தின் புகழ் பரப்பிய மாமேதையே போய்வா. உரிமையில்லா இந்த சிறு பான்மை இனம் இதைவிட வேறு எதைத்தான் சொல்ல முடியும்? ஆனாலும் ஒன்றை மட்டும் இவ் விடத்தில் கூறுவோம். தமிழினத்தின் தன்னாட்சியில் கணபதிப்பிள்ளை என்ற வில்லிசை மாமேதையின் வரலாறு பதிவாகி, பாடமாகி, கலையாகி நிலைபெறும். இது சத்தியம்.

**(வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் : 08.02.2015)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## வில்லிசைப் புலவர் கலாபூஷணம்
## நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி)

யாழ். பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாக வும், அச்சுவேலி வடக்கு, பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வில்லிசைப் புலவர் கலா பூஷணம் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி) (04.02.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னமுத்துவின் (புஸ்பராணி-ஆசிரியை) பாசமிகுக் கணவரும், கலைச்செல்வன் (கனடா), கலைமதி (கனடா), கலைரூபன் (CMR வானொலி அறிவிப்பாளர், கனடா), கண்ணகி (ஆசிரியை, விக்னேஸ்வரா முன்பள்ளி), அரியமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சோமலிங்கம், மகேஸ்வரி, தனலக்சுமி மற்றும் ஜெயராணி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் பாலசுப்பிரமணியம், மங்களபதி, விஜயலட்சுமி, கோணேஸ்வரி (கனடா), கேதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், விமலலோஜினி (கனடா), பரமேஸ்வரன் (கனடா), ஜெயந்தி (கனடா), புவனேந்திரன், கிருதாசன், ஜெயக்குமார், ரவிக்குமார் (பிரான்ஸ்), திருக்குமார் (லண்டன்), நிர்மலா, சந்திரகுமார் (ஜேர்மனி) வக்சலா (கனடா), பாலமுரளி (கனடா), கௌரிசங்கர், மனோதரன், மாலிகா, சாயிராம், கேதாரணி, அபிராமி (ஜேர்மனி), ஆரணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், சிவபாலன் (கனடா), சிவரூபி, நேசமலர் (ஜேர்மனி), கோணேஸ்வரன் (ஜேர்மனி), புவனேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பாஸ்கரன், காவேரி, சுவர்ணா ஆகியோரின் பெரிய தந்தையும், கார்த்திகா (கனடா), கலைலோஜன் (கனடா), மைதிலி (கனடா), விஷாகன் (கனடா), அபிநயா (கனடா), கலைமேனன், கலைமாறன், புருஷோத்துமன், பிரதீஸ், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கலையகம்',
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
தொடர்புகளுக்கு: 077 9676247,
0777392935.

(566800)

தகவல்:
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லிசைப் புலவர் கணபதிப்பிள்ளை சின்னமணி அவர்கள் 04.02.2015 அன்று காலை இறைபதம் அடைந்த துயரச் செய்தியானது உலகத் தமிழினத்தின் செவிகளில் இடியாய் விழுந்தது. இன்று உலகில் காணப்படும் தொடர்பு சாதனங்களுள் முதன்மையான இடத்தில் இருக்கும் முகநூலில் ஏராளமானோர் உடனடியாகவே தரவுகளையும் அஞ்சலிகளையும் பதிவு செய்து கொண்டனர்.

ஈழத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் இயங்கி வருகின்ற தமிழ் வானொலிகள், இலத்திரனியல் ஊடகங்கள், தொலைக் காட்சிகள் போன்ற அனைத்தும் இவரது இழப்பின் கனதியை உணர்ந்து இவர் பற்றிய செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்தன.

இவை அனைத்திற்கும் உதவியாய் இருந்தது வில்லிசைப் புலவர் கணபதிப்பிள்ளை சின்னமணி அவர்களோடு இருபத்து மூன்று ஆண்டுகள் ஆர்மோனியக் கலைஞராக எண்ணற்ற மேடைகளில் அணிசெய்த கலைஞர் தவநாதன் றொபேட் அவர்களால் தனது முக நூலில் தரவேற்றம் செய்யப்பட்ட தகவல் தொகுப்பேயாகும். அந்தத் தொகுப்பு இங்கே இடம்பெறுகின்றது.

## வில்லிசைப் புலவர் கணபதிப்பிள்ளை சின்னமணி காலமானார்

ஈழத்தின் வில்லிசைச் சக்கரவர்த்தி சின்னமணி அவர்கள் இன்று காலமானார். வில்லிசைக் கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அக்கலையை எழுச்சி கொள்ளச் செய்தவர் சின்னமணி அவர்கள். வில்லிசை என்றால் சின்னமணிதான் என்று அனைத்து நிலையினரும் மனம் விட்டுக் கூறும் அளவிற்கு புகழின் உச்சத்தைத் தொட்டவர்.

நூற்றுக் கணக்கான வரலாறுகளை அழகுற வில்லிசையாக்கி ஆயிரக்கணக்கான மேடைகள் கண்ட வில்லிசைக் கலையின் முடிசூடா மன்னவன் அவர். ஈழத்து கலைவானில் சூரியன் போல் பிரகாசித்தவர்.

வில்லிசைக் கலைக்கென்றே தன்னை முழுமையாக அர்ப்பணித்த அவருக்கு நிகர் அவரே தான். அவர் பற்றிய முக்கியமான தரவுகள்

**பெயர்** : க.நா. கணபதிப்பிள்ளை சின்னமணி

**பிறப்பு** : 30.03.1936

**இறப்பு** : 04.02.2015

**தந்தை பெயர்** : கணபதிப்பிள்ளை நாகலிங்கம்

**தாய் பெயர்** : இராசம்மா நாகலிங்கம்

**பிறந்த ஊர்** :

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப்பகுதியில் இருக்கும் கலைவளம் நிறைந்த சிற்றூரான மாதனை என்னும் கிராமம். காத்தவராயன் கூத்து, இசைநாடகம், சிற்பம் போன்ற துறைகளில் ஈழத்தில் புகழ் பூத்த கலைஞர்கள் பலரைப் பிரசவித்த ஊர் அது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்துறைப் பிரவேசம்

தனது எட்டாவது வயதில் குழந்தைக் காத்தானாக நடித்துப் புகழ் பெற்று, நாடகத்துறையிலும் கல்வியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்வராகவே வளர்ந்து வந்தவர். தமிழ் மொழியில் பெரும் புலமை கொண்டிருந்த தனது தாயிடமும் தந்தையிடமும் தமிழையும் *புராண* இதிகாச வரலாறுகளையும் குருகுலத்தில் கற்பதைப்போன்று கற்றதுடன் தனது மாமனாரான கீதாஞ்சலி வி.கே.நல்லையா (நாட்டியக் கலைஞர்) அவர்களிடம் நடனத்தையும் இசையையும் கற்றுக் கொண்டார். பாடசாலைப் படிப்பைச் செவ்வனே முடித்துக் கொண்ட பின் 1957இல் ஆசிரிய நியமனம் பெற்று இரத்மலானை கொத்தலாவலபுரம் தமிழ்ப்பாடசாலையில்தமிழ், ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார்.

## நாடகத்துறை ஈடுபாடு

சிறு வயதில் இருந்து நாடக நடிகனாக வளர்ச்சி கண்டு வந்த இவர் கொழும்பில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் தமிழகத்தின் புகழ்பூத்த நாடக மேதைகளான ரீ,கே,சண்முகம் சகோதரர்களுடன் இணைந்து நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்ற நாடகங்களில் பங்குகொண்டதுடன் இலங்கை வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் பணியாற்றி வந்தார்.

அத்துடன் அக்காலத்தில் கொழும்பில் தங்கியிருந்து நாடகங்களை மேடையேற்றிவந்த திரைப்பட நடிகரும் வில்லிசையாளருமான கலைவணர் என்.எஸ்.கிருஸ்ணனுடன் தங்கியிருந்து நாடக உத்திகளையும் வில்லிசையின் நுட்பங்களையும் கற்றுக்கொண்டார். வண்ணை. கலைவாணர் நாடக மன்றத்தின் உருவாக்க உறுப்பினர்களுள் ஒருவரான இவர் இம்மன்றத்தால் பல தடவைகள் மேடையேற்றப்பட்ட திப்புசுல்த்தான், வீரமைந்தன், இன்பக் கனவு போன்ற நாடகங்களில் முக்கிய நடிகராகச் சிறப்புற நடித்துத் தனது நடிப்புத் திறனை அற்புதமாக வெளிப்படுத்தி நாடகத்துறையில் ஆழமாகக் கால்பதித்துக் கொண்டார்.

## வில்லிசைத் துறை ஈடுபாடு

இவ்வாறு நாடகத்துறையில் துறைதோய்ந்த நடிகனாக விளங்கிய இவர் அக்காலத்தில் ஈழத்தில் வில்லிசை நிகழ்வுகளை வழங்கிவந்த திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களின் நிகழ்வில் நகைச்சுவையாளனாகவும் பக்கப்பாட்டுக்காரனாகவும் உடுக்கிசைக் கலைஞனாகவும் வில்லிசை அரங்கைப் பல ஆண்டுகளாகச் சிறப்பித்து வந்தார்.

## தனித்துவமான வில்லிசையாளனாக உருக் கொண்டார்

நடிப்பு, இசை, நடனம், தமிழ், சமயம், போன்ற அனைத்திலும் ஒப்பற்ற திறன் கொண்டவராக விளங்கிய இவர் ஆர்மோனியக் கலைஞர் நல்லூர் சோமசுந்தரம், எஸ்.ரி.அரசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரின் துணையுடனும் குருவாக விளங்கிய திருப்பூங்குடி ஆறுமுகத்தின் ஆசீர்வாதத்துடனும் தனித்துவமான வில்லிசைக் கலைஞனாக 02.02.1968 அன்று மாலை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய முன்றலில் பெருந்திரளான கலைஞர்கள், பொதுமக்கள், ஆர்வலர்கள் முன்னிலையில் கலைவாணர் வில்லிசைக் குழு என்னும் பெயரோடு வில்லிசைக் கலைஞனாக அரங்கேற்றம் கண்டார்.

## புகழ் பெற்றது வில்லிசை

பல்துறைத் திறன் கொண்ட இவர் வில்லிசை நிகழ்வின் நாயகனாக அமர்ந்து கதையைச் செல்லும் முறையும் நவரசபாவங்களை முகத்தில் காட்டும் அழகும் கதையில் வருகின்ற பாத்திரமாக மாறி நடிக்கும் திறனும் தமிழை அழகுற உச்சரிக்கும் பாங்கும் பொருளுணர்ந்து பாடல்களைச் சுருதி லயம் பிசகாமல் பாடும் இனிமையும் சிந்தனையைத் தூண்டும் நகைச்சுவையும் எவரும் எதிர்பார்க்காத விதத்தில் உதிக்கும் கற்பனையும் இவரது தனித்துவப் பண்புகளாக வில்லிசை நிகழ்வுகளில் பொங்கிப் பிரவகித்த போது மக்கள் தம்மை மறந்து இரசித்தனர். இவரது வில்லிசை மாபெரும் புகழைத் தேடிக் கொண்டது.

மரபு வழியான கலைநிகழ்வுகளே முழுமையாக ஆலயத் திருவிழாக்களில் இடம்பெற்று வந்த அக்காலத்தில் இவரால் தொடங்கப்பட்டுப் புதுமையாக உருவாக்கப்பட்ட வில்லிசையானது பெரும் வரவேற்பைப் பெற்றது. இக்கலைக்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இவர் தமிழர்களால் விரும்பப்படும் கதைகள் அனைத்தையும் வில்லிசை வடிவில் உருவாக்கிச் சிறப்புற நிகழ்த்தி வந்தார். இராமாயணம், மஹாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், ஐம்பெரும் காப்பியங்கள் போன்றவற்றையும் தமிழ் இலக்கியப் பரப்பில் சிதறிக் கிடக்கின்ற நூறிற்கும் மேற்பட்ட வரலாறுகளையும்வில்லிசையாக்கி தொடர் நிகழ்வுகளாக நிகழ்திச் சாதனை படைத்தவர். இவ்வாறான வரலாறுகளை வில்லிசையாக நிகழ்த்தும்போது கதையில் வருகின்ற அத்தனை பாத்திரங்களாகவும் அப்படியே மாறிவிடும் இயல்புடையவராக இவர் இருப்பதனால் படித்தவர் முதல் பாமரர் வரையான அனைவரும் இவரது வில்லிசையை மெய் மறந்து இரசித்தனர்,போற்றினர், புகழ்ந்தனர்.

## சென்ற நாடுகள்

ஈழத்தின் பட்டி தொட்டி எங்கும் புகழ்பெற்றது மட்டுமல்லாமல் மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிஸ் போன்ற நாடுகளிலும் பல மாதங்கள் தங்கியிருந்து நிகழ்வுகளை வழங்கியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைநாடகத் துறை

இவ்வாறு வில்லிசைத்துறையில் சரித்திரம் படைத்த கலைஞராக இருந்த போதிலும் இசைநாடகத் துறையிலும் தன்னிகரற்ற கலைஞராக விளங்கியவர். இசைநுட்பம் நிறைந்த பாடல்களையும் பல வரலாறுகளை எடுத்துரைக்கின்ற நீண்ட வசனங்களையும் கொண்டமைந்த பாத்திரமான இயமனாக நடிப்பதில் தனித்துவமான பாணியை ஏற்படுத்திப் பல இளம் நடிகர்களிற்கு எடுத்துக்காட்டாக நடித்துக் காட்டியவர். இயமனாக நடிப்பது எப்படி என்பதற்கு இலக்கணம் வகுத்தவர். மேலும் நட்சத்திரத் தரகர், தோட்டி, சத்தியகீர்த்தி போன்ற பாத்திரங்களிலும் தனித்துவம் பெற்றவர். சுருதி சுத்தமாகக் காத்தவராயன் கூத்தைப் பாடி நடிக்கும் திறன் கொண்ட சிலருள் முதன்மையானவர்.

## பெற்ற பட்டங்கள்

பல விதமான பட்டங்களைத் தமிழர்கள் அவரிற்குச் சூட்டி மகிழ்ந்தனர். அவற்றுள் சில வில்லிசைப் புலவர், கலாவினோதன், முத்தமிழ் மாமணி, வில்லிசை வேந்தன், வில்லிசைச் சக்கரவர்த்தி, வில்லிசைத் திலகம், பல்கலை வேந்தன், முத்தமிழ் வித்தகன், ஜனரஞ்சக நாயகன், வில்லிசைப் பேரொளி, நவரசக் கலைஞன்

நமது தாயகத்தின் தேசியக் கலைஞரான இவரது மறைவு ஈழத்தின் கலைத்துறையில் ஈடுசெய்து கொள்ளக் கூடிய ஒன்று அல்ல. ஊரெங்கும் ஒலித்து நம் இதயங்களில் பதிந்த குரல் அமைதியடைந்து விட்டது.

என்றும் அழியாது அவர் புகழ்.

**அவரது பொற்பாதங்களை என்றும் வணங்கும் மாணவன்**
**த.ஹொரேஸ்,**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.

கடந்த 04.02.2015 அன்று சிவபத மெய்திய எமது அன்புத் தெய்வம்

## அமரர் வில்லிசைப்புலவர் கலாவினோதன்
## நாகலிங்கம் கணபதிப்பிள்ளை (சின்னமணி)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல்
கூறியோர்க்கும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்கள்
ஊடாகவும் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும்
தமது அஞ்சலிகளைத் தெரிவித்த
அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றிய
அவர் தம் கலைஞர்கள் அறிஞர் பெருமக்கள் சமயப் பெரியோர்கள்
அரசியல் தலைவர்கள் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் உற்றார்,
உறவினர் நண்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள்
பதாதைகள் வெளியிட்டோருக்கும் மலர் வளயங்கள்
பூமாலைகள் அஞ்சலி செலுத்தியோர்க்கும். இன்று நடைபெறும் ஆத்
மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன
நிகழ்விலும் கலந்து சிறப்பித்தோர்க்கும் ஞாபகார்த்த மலரை
அச்சிட்ட ஸ்ரீ கனேசன் அச்சகத்தாருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

JJ Print 416.298.9322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org